122

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹஸறத் அலியுல்லா அவர்கள்

மணம்புரிந்த

# பப்பரத்தியாரம்மானை.

---

இதனை மதுரைமா நகரம்,

உலக கவிஞர் குமாரராகிய

ஸெயிது மீருப்புலவர்

பாடியது.

இஃது காயற்பட்டணம்

கண்ணஹ்மது மகுது முஹம்மதுப்

புலவரவர்களால் பார்வையிடப்பட்ட

பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

காஜா ஹஸனலிப் புலவர்

அவர்களால் பார்வையிட்டு

---

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1952 [அணா 8.

Q7:417
N52
111229

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹஸரத் அலியுல்லா அவர்கள்

மணம்புரிந்த

# பப்பரத்தியாரம்மானை.

இதனை மதுரைமா நகரம்,

உசை நயினர் குமாரராகிய

**ஸையிது மீருப்புலவர்**

பாடியது.

இஃது காயற்பட்டணம்

**கண்ணஹ்மது மகுதூ முஹம்மது**

புலவரவர்களால் பார்வையிடப்பட்ட

பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

**காஸீ ஹஸனலிப் புலவர்**

அவர்களால் பார்வையிட்டு

---


சென்னை, திருவல்லிக்கேணி,

**ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,**

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1952 [அணா 8.

பிஸ்மில்லாஹி.

# பப்பரத்தியாரம்மானை.

## காப்பு-வெண்பா.

எப்படைப்புக் தான்படைத்த இறையவனே நின்னருளால்
பப்பரத்தியம்மானை பாடுதற்கு-இப்புவியில்
மக்கந்தனிலுதித்த முஹம்மதனார் தம்பொருட்டில்
ஹக்கனே நீயுதவியாம்.

## கடவுள் வாழ்த்து.

மலையுமலைகடலு மற்றுமுள்ளவான்பு வியில
நிலையாயணியணியாய் நீதியுடனே படைத்து

அறுசுங்குறுசு மழகானசொர்க்கமெல்லாம்
வரிசையுடனமைத்த வல்லவனே நின்னருளால்

செப்பமுடனலியார் சென்றுயெமன் ராஜ்ஜியத்தில்
பப்பரத்தியாரை பாங்காய்மண முடித்த

கதையதனைப்பாடுவதற்குக் காவலனேகார்த்தருள்வாய்
இதைமனதிலெண்ண வேகனுதவிசெய்வாய்

ஆதியருளாலே யப்துல்லாபெற்றமைந்தர்
வேதநபிபாதம் மென்மேலும் போற்றிசெய்வேன்

அன்பினெறியுடைய அபூபக்கர்பாதமதை
இன்பமுடன்பணிவே னெப்போதுந்தப்பாமல்

சரகுதனிலுள்ளபடி தன்மகனை வதைசெய்தோர்
தரணிதனிலுமறுகத்தா தாள்மலரையான்பணிவேன்

சதுவான்வரிப்பலகை தப்பாமலே யெழுதும்
உதுமானார்பாதம் ஒருநாளும் யான்மறவேன்

அருஷிடமீண்டுவர ஆலநபிதம்பாலில்
திருவாழிவாங்குமலி சீர்பாதம்யான்மறவேன்

வல்லோனலிப்புலியார் மைந்தரசனுசைனார்
நல்லோர்பதமிரண்டும் நாடோறும்யான்பணிவேன்

மூன்னூற்றுப்பதின்மூன்று முறுசல்நபிமார்கள்பாதம்
என்றும்பணிந்திடுவே னெப்போதுந்தப்பாமல்

பட்சத்துடனிறையைப் பாங்காய்வணங்குகின்ற
லட்சத்திருபத்திநாலாயிரம் நபிமார்பாதம்பணிவேன்
ஜெகத்திலுளளோர்குபிரகற்றித் தீனைமிகவிளக்கி
பகுதாதில்வாழும் முஹியித்தீனைத்தான் பணிவேன்
நாகூரில்வாழுகின்ற நல்லதொருமீராவின்
வாகுடையநல்ல மலர்பாதம்யான்பணிவேன்.

## அவையடக்கம்.

காரிகைநந்நூல்கள் கற்றபெரியோர்களுடன்
வீரியமாச்செப்பரியேன் மெய்ப்புலவர் தங்கள்முன்னே

தங்கமலையெதிரே தானுமோராசைவந்து
அங்குவிலைசொன்னதுபோ லம்புவியிற்பாடலுற்றேன்

அந்தமுள்ளநாய னலியார்திருக்கதையை
சிந்தைமகிழ்ந்து சீர்புவியில்பாடலுற்றேன்

கூடல்நகரதிபன் கோமானருளுடையோன்
ஆடவர்கள்மேய்க்கு மசாராபிதாணீன்ற

உற்றபுகளுடைய வுசைனைனர்தன்பாலன்
சிற்றலிவாலிக்கதையைச் செய்துமீராவுரைத்தேன்.

கோமானருள்பெருகுங் கூறுமக்கமாநகரில்
தேமாங்கனிபொசித்த செல்வமுஹம்மதரும்.

திருமதினமாநகாஞ் சென்றஹிஜிராத்து
வருடமோராயிரத்தி நூற்றிபத்தஞ்சதனில்

தாரணவருடமதிற் ருனடிமாதத்திலே
பாருலகிற்றேதி பதினெட்டாநாளையிலே

வெள்ளிக்கிழமைதனிலே வியனுகவிக்கதையை
பள்ளிதனிற்கொத்துபா பரிவாய்த்தொழுதபின்பு

உமறுப்புலவர் முன்னே உகந்துரைத்தகாவியத்தில்
சமாரிற்புலிகதையைத் தானேதெளிந்தெடுத்து

இம்மைதனிலே யிறையோனுதவியினுல்
அம்மானையாக அடியேநான்பாடலுற்றேன்.

## மதீனநகரத்தின் முஹம்மது நபிவரலாறு கூறுதல்.

ஆதியருளா லஹமதிறசூல் நபிக்கி
வேதமிறக்கி மெய்ப்பட்டந்தானிறைக்கி
பத்தியுடன்வானோர் பணிந்துசலாமுறைத்து
கத்தனிடவான்பரியுங் கட்டுமெட்டாய்த்தானிறங்கி

துய்யோனருளாலே துல்பக்ருவாளுடனே.
வெய்யோனொளிபோல விண்ணிறங்கி நபிதனக்குத்
தூதர்சலாஞ்சொல்லித் தூதுதான்வந்துசொல்ல
நீதமுடனேகலிமா நிச்சயமாய்ச் சொல்லாத
காபிர்களைவெட்டிக் கறுவறுத்துதீனுக்கி
பாவந்துலைத்துப் பயிரேற்றுகாலையிலே.

## ஏமன்பதியாளுங் கோவராசன் வரலாறு கூறுதல்.

எமன்பதிதனிலே யிருக்குங்கோவராஜனுக்கு
சமர்பொருதும்வீரர்களுஞ் சகலதுரைமன்னர்களும்
வாகுடனேகுஞ்சரங்கள் வண்மையுடனாயிரங்காண்
பக்கக்குதிரை பதினாயிரங்களுண்டாம்
மட்டிலடங்காத மற்றுமுள்ளகால்படைகள்
எட்டுலக்ஷம்பேர்க ளெண்ணமுடியாது
இப்படியேதானுக விருக்குமந்தராஜனுக்குச்
செப்பமுள்ளமந்திரிகள் சேர்ந்தபனிரெண்டுமுண்டாம்
சமரில்வல்லவன்காண் தானிருக்கும்பட்டணந்தான்
எமனெனும்பட்டணமா மிளவரசாய்த்தானுளும்
கோட்டையறுபதின்காதம் குறிப்பான நீளமுண்டாம்
காட்டைவளைத்தயிடம் நல்லதொருமுப்பதுண்டாம்
அரசனிருக்கின்ற வரண்மனையுங்காதவழி
வரிசையுடனரசன் வாழ்ந்திருக்குங்காலையிலே
மன்னனிடைசீமையிலே மான்மறைகள்மெத்தவுண்டு
சொன்னமொழிதப்பாது துய்யோன்பொருட்டாலே
சேர்ந்தவரசனுக்குச் செல்வம் வெகுநாடுமுண்டாம்
வாழ்ந்தநல்லபட்டணமும் வகுதாதெனுநாடும்
ஆயரெனும்பட்டணமும் மகுதுமுதுநாடும்
மாயமுள்ளகீழ்நாடு மற்றுமுள்ளமேல்நாடு
சீனமெனுநாடுஞ் சேர்ந்தகருநாடுகளும்
கானமுள்ளநாடுங் கருணைவசநாடாம்
அந்தந்தநாட்டிலுள்ள வரசரெல்லாம்வந்துநிதம்
சிந்தைமகிழ்ந்து திரைகள் செலுத்திநிற்க
ஒப்பஞ்செலுத்தி யுலகாளுகாலையிலே
செப்பமுள்ளயெமன்பதியிற் றினமுமழைபொழிய
இறையோனருளா லிருக்குமந்தராஜனிட
தரணியையாளுதற்குத் தானுண்குழந்தையில்லா

பெண்குழந்தையெட்டு பிறந்திருக்கும் காலையிலே
அண்ணல்மகாராஜ னப்போமனஞ்சலித்து
கோயிலுங்கோபுரங்கள் குளங்கள்மிகவுண்டாக்கி
ஆயநல்லபுத்துகளை யன்பாகத்தான்வணங்கி.

## அரசன்மனைவி கெர்ப்பமாகுதல்.

இருக்குமந்தவேளையிலே இறையோனருளாலே
பெருக்கவரசியற்கும் பிள்ளைதரித்ததுவே
அரசனிடதேவியரு மன்பாகச் சூலாகி
பிரியமுடனிருந்தாள் பேருலகந்தானறிய
அந்தநல்லவேளையிலே யரசனுக்தேவியரும்
சிந்தைமகிழ்ந்து தெளிவாயிருக்கையிலே
மன்னன்மனஞ்சலித்து மனைவியைப்பார்த்தேது சொல்வான்
உன்னுடையவயிற்றி லுதித்தொருகெற்பமூந்தான்
ஆண்குழந்தையுண்டானு லன்பாகவைத்திருப்பேன்
வீண்பிள்ளைப்பெண்ணானு லுனை வெட்டியெறிந்திடுவேன்
சொன்னமொழிகேட்டணங்கு துயரமூற்றிருக்கையிலே
வன்னமயிலணையாள் வகைபத்துமாதஞ்சென்று
வயறுநொந்திருக்கையிலே மருத்துவச்சிக்கேது சொல்வாள்
கயல்விழியேமருத்துவச்சி கன்னிகையேநீகேளாய்
ஆண்குழந்தைபெற்றேனென்றால் அன்பாகநீயிருப்பாய்
பெண்குழந்தைபெற்றேனென்றால் பேருலகிற்றெறியாமல்
மறைத்திடுவாயானுக்கால் வரிசையதுதருவேனென்
றுரைத்தமொழிகேட்டு மூகந்திருந்தாள்மருத்துவச்சி.

## இராஜன் மனைவி வயிற்றில் பப்பரத்தியார் பிறக்குதல்.

ஏவலர்கள்வரரம லிளங்கொடியாள் சூல்கலைந்து
பாவையொன்றுபெற்றாளே பைங்கிளியாள்மின்னொளிபோல்
பெண்ணென்றறியாமல் பெரியோனுதவியினால்
ஆணென்றுசொல்லி யரசனுக்குமாள் விடுத்தாள்.
தோழியர்களோடிச் சொன்னார்கள் ராசனிடம்
ஆழிநெறியில்நின்ற வரசன்மனமகிழ்ந்து
சர்க்கரையெல்லோருக்குஞ் சந்தோஷமாய் வழங்கி
மூக்கியமாய்யெளியோர்க்கு மூறையாகத்தானஞ் செய்தார்
பெண்மயிலாளப்போது பெரியோனுதவியினால்
ஆணென்றுசொல்லி யன்பாகத்தான்வளர்த்தாள்.

## பப்பரத்தியார் பள்ளியிலிருக்குதல்.

இந்தப்படிவளர்த்தா ரேழுவயதானமட்டும்
மைந்தனென்று பள்ளிக்கு வைத்தாரேமன்னவரும்
பத்துவயதில் படித்துமுடிந்தபின்பு
உற்றசிலம்புவித்தை யுறுதியுடன் கற்றபின்பு
ஆனைகுதிரை யனேகால்லயேற்றமெல்லாந்
தானேபிடித்துத் தயவாயிருக்கையிலே.

## பப்பரத்தியாருக்கு எமன்பதியை முடிசூட்டல்.

இந்தப்படியிருக்க இராஜன்மனமகிழ்ந்து
மைந்தனுக்குப்பட்டமது கட்டினன்மன்னவனும்
கட்டினர் பட்டமதுங் கடவுளுதவியினல்
திட்டமுடன் மந்திரிமார் சேரவேசூழ்ந்திருக்க
நீதமுடன்ராஜ்ஜியத்தில் நெறிகடத்துங்காலையிலே
போதப்புலிபசுவும் பொருந்தி யொருதுறையில்
தண்ணீர்குடித்துத் தவனமிளைப்பாறும்
மண்ணிலுள்ளமன்னவர்கள் மகிழ்ந்துமிகக்கப்பமிட
வாழ்ந்திருக்குங்காலையிலே வல்லோனமைத்தபடி
வேந்தனிடகாலஞ்சென்று விண்ணேகிப்போனதின்பின்
செய்யுங்கருமவிதி செய்தானிளவரசன்
நீதிவயது நிறையப்பதினாறும்
ஆகுமந்தவேளையிலே யானதொருமந்திரிமார்
வாகுடனேதானுரைப்பார் மன்னவனேயுன்தகப்பன்
ஊருக்குமப்பாலே உயர்ந்தமலையதுவும்
ஆறுகாதமாகு மந்தமலைதன்னுயரம்
செப்பமுள்ளமலையிற் சேர்ந்தரசன் கொலுவிருந்தார்
தப்பாமல்நீருமங்கே தானேகொலுவிருக்க
வாருமென்றுகூப்பிடவு மன்னவரும்போயினரே
வீறுடனேபோயங்கே வீற்றிருக்குங்காலையிலே

## வசுராபதியரசன் வரலாறு கூறல்.

வசுரமென்னும்பட்டணத்தில் வாழுமரசனவன்
அசுரனெனுமரசன் அவனுடையதன்வலிமை
ஆனையொருலட்சத் ததின்மேற்பதினாயிரமாம்
சேனைப்பெருந்தளங்கள் சேரவேபத்துலட்சம்

காலாட்படைகள் கணக்கிலடங்காதாம்
ஆலமெல்லாம்படைத்த ஆதியருளாலே
அதிலேயொருயானைக் காயிரந்தலைகளுண்டாம்.
துதிக்கைகளாயிரமாம் சொல்லுமந்தயானை தனை

## எமன்பதிக் கள்ளர்கள் வசுராபதியில் யானை திருடப்போகுதல்

கன்னமிடவேண்டுமென்று கணக்கவொருமுகமாய்
எண்ணியேபதினறுபே ரிசைந்தயெமன்ராஜ்ஜியத்தார்
வயதுபதினறுய் வாலப் பிராயமுமாய்
தயவாயொருமுகமாய்த் தானுள்ளபேர்களுமாய்
சேரவொருமுகமாய்த் திரண்டுமங்கே தான்கூடி
பாரமுள்ளயானை தனைப் பாங்காய்க்களவுசெய்ய.

## அசுரராஜனைக் கள்ளர் காணுதல்.

மாவுத்தர்வேடமாறி வந்தார்வசுராவில்
ஆவலுடன்வந்து அரசனிடந்தான்போனர்
போனவுடன்கண்டு புகழ்பெரியராசனுந்தான்
ஆனைகட்டு மனிதர்களேயாரென்று தான்கேட்டான்
அப்போதுகள்ள ரன்புடனே தாமுரைப்பார்
இப்போதுகாங்க ளிருப்பதுவடதேசம்
பாரமுள்ளயானைகட்டும் பாங்கான மாவுத்தர்கள்
தாரமுள்ளராஜ்யத்தில் தோன்றியேயவ் விடத்தில்
தலைமுறையதாகத் தான்சேவகமாயிருந்தோம்
நிலைமையாய்மன்னவனும் நிலங்கள் சிலதுவிட்டு
வெகுமானமுள்ளபொருள் வேண்டியதெல்லாங்கொடுத்து
தகுமானசேவகத்திற் ருமிருந்தோமின்றளவும்,
இப்போதும்மிடத்தி லிருக்குமந்தயானை தனை
செப்பமாய்காங்கள் கட்டச் சேர்ந்துவந்தோமும்மிடத்தில்
சிந்தைமகிழ்ந்துகொண்டு செப்பமுள்ளயானைக்கு
பந்தனமாய்ச்சேவகமும் பார்க்கவேநீருரைத்தால்
சேவகமாகவுமிருந்து திரமாகப்பார்த்திடுவோம்
பாவனையாக பட்ச முடனின்றுரைக்க
உரைத்த தொருகள்ளருக்கு முற்றதொருசேவகந்தான்
விரைந்துகல்லதென்று வேந்தன்விடைகொடுத்தார்
சேர்ந்ததொருயானையின்மேற் சேவகமுந்தானெழுந்து
ஏர்ந்ததொருகள்ளருக்கு மெண்ணிமுடியாத
வெகுமானமற்றதுவும் வெகுசீர்மை தான்கொடுத்தான்
பகுமானமாகப் பார்த்திருக்கும்வேளையிலே

## அசுரராஜன்மேல் வடதேசத்தரசன் படை யெடுத்துவந்து யுத்தஞ்செய்தல்

அந்தநாள் தன்னி லசுரனெனும் ராசன்மேல்
வந்தார் பெரும்படையாய் வடதேச ராஜ்ஜியத்தார்

அசுரனெனுமரச னப்போது யேதுசெய்வான்
விசுவாசமந்திரியை வேண்டியே தானழைத்து

சேனைகளைக் கூட்டுமென்றான் தீரமுள்ள ராசனுந்தான்
வானங்குவிந்ததுபோல் வந்துதே தன்படைகள்

பாயும்புரவிகள் தான் பதினாயிரஞ்சூழ
வாயுவேக யானைகளும்வந்துமே தான்சூழ

கண்ணிற்கடங்காத காலால் பெருஞ்சேனை
எண்ணத்துலையா தேட்டிலடங்காது

இந்தப்படைகளுட னெழுந்தானரசனுமே
வந்த வடராஜ்ஜியத்தார் வண்ணலட்சஞ் சேனையுடன்

சுற்றிவளைத்தார்கள் சுழல்காற்றடித்தது போல்
வெற்றி முரசடித்தார் வீரவடராஜ்ஜியத்தார்

அசுரரொனுமரச னவன்மேற் படையெழுப்பி
திசைகளதிர்ந்திடவே சேனையுத்தஞ் செய்யலுற்றார்

எதிர்த்துச்சண்டை செய்தார் களிருவரிடதன்படையும்
மதிப்பாய் பொருதிட்டார் வல்லோனருளாலே

அப்போதசுரராஜ னவனுடைய சேனைத்தளம்
செப்பமுடன் களைத்துச் சேரமடிந்திடவே

ஆனைபரிசேனை யனேகமடிந்ததுவே
சேனைப்படைத்தலைவர் சீராய் மடிந்திடவே

அசுரராஜன் முறிந்தோட வப்போது சேனைதளம்
விசைவாகவேசிதறி வெகுதுலவிலோடிடவே

### எமன்பதிக்கள்ளர் யானைகொண்டு போகுதல்

ஓடுமந்தவேளையிலே யுற்றதொரு கள்ளருந்தான்
காடுமந்தயானைதனை காட்டமுடனே திருப்பி

கானல்மலைகடந்து காடுகளுந்தான் கடந்து
வேனிலனலெரிக்கும் வெட்டவெளிகடந்து

கொண்டு யெமன் ராஜ்ஜியத்தில் கோலமுள்ள யானைதனை
சென்றுமலையருகே சேர்ந்தார்களப்போது

பாந்தமுள்ள கள்ளர்கள்தான் பரிவாகயானைதனை
வேந்தனதுமுன்னே விட்டார்களப்போது

## எமன்பதி பப்பரத்தியரசர் கள்ளரைக்கண்டு வினவுதல்

விட்டவுடன் யானைதனை வேந்தனவன்றான் பார்த்து
இட்டமுடனிந்தயானை யெங்கிருந்து வந்ததென்றார்
அப்போது கள்ளர் ராசனுக்கு யேதுசொல்வார்
செப்பமுள்ள தீவில்சென்று கொண்டுவந்தோ மென்றார்

வந்தோமென்ற சொற்கேட்டார் வண்மையுள்ள ராசனுந்தான்
சந்தோஷமாகித் தயவாகயேதுசெய்தார்
கஷ்டமுடன் கொண்டுவந்த கனமான கள்ளருக்குத்
திட்டமுடன் சேவகமுந் திறமாகத்தானெழுதி

தகுமான திரவியமுஞ் சந்தோஷமாய்க் கொடுத்து
வெகுமானஞ் சீமைகளும் வேண்டியதெல்லா மளித்து
சங்கையுள்ளராசாவுந் தயவாகதானிருந்து
வங்கையுள்ள கள்ளர்தனை வகையாய்ப் பார்த்தேது சொல்வார்

## பப்பரத்தியார் கள்ளரைப் புரவி கேட்குதல்

ஆனைதனக்கேற்ற வழகான வான்பரியுந்
தானுமுள்ள சீமைகளிற் றூண்டும்பரியெங்கு முண்டோ
இந்தநல்லயானைக் கிசைந்தபரி பார்த்ததுண்டோ
சிந்தைமகிழச் செப்புவீரென்றுரைக்க

வந்தமைந்த கள்ளருந்தான் மகிழ்ந்தங்கேது சொல்வார்
சந்தேகமையாவே தாண்டும்பரியெங்குமில்லை
மக்கநகருதித்து வாழுமுஹம்மதனார்
திக்கிலுள்ள காபர்களைத் தீனிசுலா மாக்கிவைத்தோர்

காடுதழைக்க வைத்தோர் கனிந்தபழஞ் சொரிய வைத்தோர்
நாடுதழைக்க வைத்தோர் நல்லமதியழைத்தோர்
இந்தப்படியே யிருக்குமுஹம்மதனார்
அந்தமுள்ளமருக ரானவலியாரும்

ஏறும்புரவியைப்போ லிப்புவியிற் கண்டதில்லை
பாருலகநாயகன் படைத்தான திசயமாய்
வாளுமவர்கரத்தில் வைத்திருக்கும் வாள்போலும்
நாளும்புரவியையு நாட்டமுடன் கண்டதில்லை
என்றுமிகக்கள்ள ரின்பமுடன்றானுரைக்க
அன்றுஇவ்வரச ரன்புடனே தான்மகிழ்ந்து

இந்தபுதுமைதனை யிப்போது நீங்கள்சொன்னீர்
அந்தப்புரவிதன்னை யன்புடனே கொண்டுவந்தால்

வேணமட்டும் திரவியமும் வெகுமதியாய் நான்தருவேன்
பூணாரமுள்ளதெல்லாம் பூட்டுவேனுங்களுக்கு

என்றரசர்சொல்ல வின்பமுடன் கள்ளரெல்லாம்
நன்றெனவே சொல்லி நாங்கள்கொண்டு வாரோமென்றார்

அப்போதுராஜ ரன்புடனே யேதுரைப்பார்
இப்போமதினகக ரேகுவீர் நீங்களென்று

நயமாகராசர்சொல்ல நாட்டமுடன் கள்வர்சொல்வார்
வயணமுடன்போக வழிச்செலவுக் கெங்களுக்கு

தந்துமனுப்புமெனத் தயவுடனே மன்னவரும்
சிந்தைமகிழ்ந்து சிலது ரொக்கந்தான் கொடுத்தார்

## கள்ளர் விடைபெற்று மதீனத்தில் குதிரை கொண்டு வரப்போகுதல்

வாங்கியந்த கள்ளருந்தான் மகிழ்ந்து நடந்தனரே
தங்காமலே நடந்தார் தாண்டும்பரி கொண்டுவர

ஆறுமாதப்பயண மன்புடனே தான்நடந்து
காருலவுகின்ற கானகமுந் தான்கடந்து

நடந்துமதினநகரில் நாட்டமுடன் வந்தார்கள்
அடர்ந்துவந்தவூர் தனிலே யப்துல்லா தன்மகனர்

வலியமுஹம்மதர்க்கு வாய்த்த மருமகனர்
அலியார்தலைமுழுகி யவரிருக்கு நேரமதில்

சிந்தையுடன் போனகள்ளர் செப்பமுடனந் நேரம்
வந்துகண்டார்கள்ளர் மனமுமிகக்கலங்கி

கண்டாரலியெனவெ கருத்தில் நினைந்தவர்கள்
நின்றவிடம் விட்டுமப்பால் நேரே நடந்தனர்கள்

வல்லோனுதவியினல் வான்புரவி தன்னையுந்தான்
நல்லகம்பர் கைப்பிடித்து நாடியந்த வீதிவந்தார்

வீதியதுதனிலே விண்புரவி பாதமது
ஆதியருளாலே யம்புவியிற்றங்காதாம்

சிலம்புபுலம்பிடுமாஞ் செஞ்சிலம்பு கொஞ்சிடுமாம்
நிலங்களதிர்ந்திடுமாம் நீள்பரிகாற்றங்காதாம்

மன்னரலியேறும் வான்புரவி காலுமது
அன்னநடை செய்திடுமா மன்னநகரின் வீதியெல்லாம்

இந்தநல்லகள்ளர்களு மிதுபுதுமையாமென்று
விந்தையுள்ளகுதிரை வேடிக்கையைப்பார்த்து
ஒக்கத்திரிவார்க ளூற்றதெருவீதியெல்லாந்
தக்கபுரவியையுந் தான்கம்பர்கொண்டுசென்று
தண்ணீரைக்காட்டித் தான்திரும்பிப்போகையிலே
கன்னமிடவந்ததொரு கள்ளர்களுமப்போது
இந்தப்புதுமையெல்லா மின்பமுடன்றான்பார்த்துச்
சிந்தைமகிழ்ந்தவர்கள் சென்றாரொருதலத்தில்
பொழுதுபோகுமட்டும் போயிருந்தாரொருமுகமாய்த்
தொழுதுபக்கீர்வேடங்கொண்டு துப்புரவாயங்கிருந்தார்
வந்தநல்லகம்பர் வான்புரவிகட்டிச்சென்றார்
அந்தநேரமசறொகுத்தி லலியாருங்கஃபாவில்
சென்றுவுடன்வணங்கச் சேர்ந்தாரலியாரும்
அன்றுயிறைவனை அன்புடனேதான்வணங்கக்
கம்பருமப்போது கர்த்தன் தனைவணங்கச்
சம்பிரமுடன்போனார் தனியோனுதவியினால்
அந்தநல்லசமயமதி லன்புடனேகள்வர்கள்தான்
வந்தாரலியும் வணங்குந் தலமதிலே
பக்கீருவேடமது பாங்காகவேயெடுத்துத்
திக்கீருவோதியபின் றின்னுமொசீவனங்கள்
தாருமென்றுகேட்டிடவே தம்பிரான்தன்னருளால்
வாரும்பக்கீறென்றுரைக்க வந்தார்வளவுதனில்
நாயனருள்பெற்ற நல்லநபிமகளாரும்
தூயநல்லரொட்டியுந்தான் தின்னுமென்றேகொடுத்தார்
வாங்கியந்தரொட்டிதன்னை வைத்தவருமேதுசொல்வார்
தாங்கவில்லையெங்கள்பசி தண்ணீருந்தாருமென்றார்
தண்ணீருந்தானும் தயவாயொருகூசாவில்
உண்ணுமென்றுசொல்லி யொருசிறங்கைநீர்கொடுத்தார்
அப்போதுகள்ள ரதிசயமாய்த்தான்பார்த்து
இப்போது எங்களுக்கு இதுவோவொசீவனங்கள்
அந்நேரம்பீவியர்தானக மகிழ்ந்தங்கேதுசொல்வார்
இந்நேரம்பிசுமில்சொல்லி யிதுவோபசியாறுமென்று
ஒசீவனங்கள்தின்னுமென்ன வுடையோனருளாலே
பசியாறினார்கள் பதினாறுபேருமப்போ
தின்றாரொசீவனங்கள் தின்னவளர்ந்ததப்போ
உண்டாரவர்களுடையோன் கிருபையினால்

தண்ணீர்குடித்துத் தவனமிளைப்பாறி
அன்னவர்களெல்லோரு மன்பாய்ப்படுத்திருந்தார்
நஞ்சுதின்றுநெஞ்சறுக்கும் நடுச்சாமவேளைதனில்
விஞ்சையுள்ளசொக்குப்பொடி விதமாகத்தானெடுத்துச்

சொக்குபொடியதனைத் தூவினாப்போது
மிக்கப்புரவியது மிகநலத்தைநோக்கிடுமாம்
அப்போகுதிரைகட்டு மானதொருசங்கிலியைத்
தப்பாமற்றானவிழ்த்தார் தானுமந்தக்கள்ளரெல்லாம்

அந்தமுள்ளசங்கிலியை யத்தனையுந்தானவிழ்த்துச்
சிந்தையுடன்வான்பரியைச் செங்கரத்திலேபிடித்து
அலியார்பிடித்துவெட்டு மானதொருதுல்பக்காற்
நலமானவாளதனை நாட்டமுடனேயெடுத்து.

## கள்ளர்கள் எமன்பதியிற் குதிரையைக்கொண்டுபோய் இராஜரைக் காணுதல்.

அவிழ்த்தபுரவியையு மந்தமுள்ளவாளுங்கொண்டு
செவித்துவெளிதனிலே சென்றார்களம்மானே
சென்றுபுரவியதைச் சேரயெமன்ராஜ்ஜியத்தில்
அன்றிறையோனருளா லட்சணமேதானெருங்கி

காயனுதவியினால் நல்லதொருவான்புரவி
மாயமாய்க்கொண்டு மகரிபிலேசென்றார்கள்
சென்றந்தராஜர்முன்னே சேர்ந்திருக்குந்தன் கொலுவில்
கொண்டுபோய்விட்டார்கள் கூடிவந்தகள்ளரெல்லாம்

கொலுவிருந்தரசர் குதிரைதனைத்தான்பார்த்து
வலுவுடையவான்புரவி வந்தவகைசொல்லுமென்றார்
வந்தவிபரமெல்லாம் வகையுடனே கள்ளர்சொல்ல
சந்தோஷமானார்காண் தான்கோவராசன்மகன்

வெகுமானந்தான்கொடுத்தார் வேண்டுமென்றசீமையெல்லாம்
தகுமானதிரவியமுந் தான்கொடுத்தாரந்நேரம்
சேர்ந்ததொருபுரவியைத்தான் சீக்கிரமாய்கட்டுமென
ஆர்ந்தசொல்லைத்தான் கேட் டன்புடனேகள்ளர்கள்தான்

சொன்னமொழிதப்பாமல் துரைராஜன் தானிருக்கும்
வன்னவரன்மனையின் வாசல்முன்னேகட்டினர்காண்
கட்டுப்புரவிமுன்னே காணமும்புல்லுர்வைக்கத்
திட்டமுடன்புல்லுகளைத் தீண்டாதொருநாளும்

தண்ணீருங்கொண்டுபோய்த் தான்முன்னேவைத்தாலும்
முன்னோனுதவியினால் முகமும்வைத்துப்பாராதாம்

பணியாரம்ரொட்டியுமாய் பாங்குடனேவைத்தாலும்
தனியோனுதவியினாற் றான்றிரும்பிப்பாராதாம்

இந்தப்படியா யிருக்குமந்தவேளையிலே
அந்தமுள்ளமதினநக ரதிசயத்தைச் சொல்லுகிறேன்

புதுமையலியாரும் பெரியோன்றனைத்தொழுக
கல்பெருகுங்கஃபாவில் கருத்துடனேபோய்சேர்ந்து

மூசாநபிதொழுத முன்னவன்றனேசாவில்
ஆசாரமாய்த்தொழுது யாலநபிகால்பணிந்து

வந்தாரவருடைய மாளிகைக்குள்ளேயலியார்
முந்தவவர்வளவின் முகத்திற்கெதிராக

வல்லமையாக வன்னமணிமண்டபத்தில்
நல்லதொருவான் புரவி நாட்டமுடன்கட்டிநிற்கும்

அனுமானித்துநிற்குமது மன்புடனேயெந்நாளும்
இனிசத்தன்கேளாம லேங்கியலியாரும்

புரவிகட்டுமிடத்திற் போயங்கேபார்த்தவுடன்
அரியபுரவியையு மன்னபானவாள்தனையும்

காணுமமேலயலியார் கனக்கமனஞ்சலிப்பைப்
பூணியிறையவனைப் போற்றிப்புகழ்ந்தனரே

அலியார்மிகவுஞ்சலித் தாறுநாள்மட்டாக
மெலிவாயவருடைய மாளிகைக்குள்ளேயிருந்து

ஏழாநாளாகும்போ திறையோனபியிடத்தில்
தாழலுடனேயலியார் தானுமேவந்தனரே

வந்தவலியாரும் வள்ளல்நபிதிருமுன்
சிந்தைகலங்கியங்கே செப்புவார்சேதிதனை

ஆலம்படைக்குமுன்னே யாதியொளிவிற்புகுந்து
ஞாலமதில்விளக்காய் நானிலத்தில்வந்துதித்த

எங்கள்நபினாரே யெல்லவர்க்கும்நாயகமே
மங்காதசந்திரன்போல் மாநிலத்தில்வந்தவரே

ஆதியருள்பெற்றிருக்கு மப்துல்லாபுத்திரரே
நீதியுள்ளநாயகமே நிஜவார்த்தைகேட்டருள்வீர்

ஆயபெரியோனருள் நபியேகேளுமினித்
தூயபுரவியையுந் துல்பகருவாள்தனையும்

கட்டி கிற்குமிடத்தில் காணாமற் போய்விட்டது
திட்டமுடனுரைத்தேன் திருநபியேநீர் கேளும்

ஆதியிறையோன்றனக்கு யான்செய்தபாவமிதோ
நீதிமுறைகள்நிறைதப்பிப் போனதுண்டோ

என்றலியாருரைக்க விறையோன்னபிசொல்வார்
நன்றுயிறையோன் தூது நமக்குவருஞ்சொல்வேனென்றார்

உரைத்தமொழியதனை யுடையோனுந்தானறிந்து
விரைந்துஜிபுரியிலே மேலோனுங்கூவிச்சொல்வான்

அந்தமுள்ளயென்றோழ ரஹ்மதுர்ரசூல்நபிக்கு
எந்தன்சலாமுரைத்து இப்போதுசொல்லுமென

ஆனபுரவியையு மன்பானவாள்தனையுந்
தானும்யெமராஜ்ஜியத்திற் சதிராயிருக்குதென்று

அலியார் தனக்கிசைந்த வாகனமங்கிருக்குதென்று
வலியநபிக்குச்சொல்லி வாருமென்றானிறையவனும்

ஏகனுஞ்சொன்னவுட னெழுந்திருந் தார்ஜிபுராயிலும்
தாகமதாகப்புவியிற் றானிறங்கிவந்தனரே

ஆதியருட்படிநபிக்கு யான்பாய்சலாமுரைத்துச்
சோதியருள்பெற்றநல்ல தூயோனிறசூலே

துப்புறவான்புரவி துல்பக்றாவானதுவுந்
தப்பியதுபோச்சுதென்று தான்சலிக்கவேண்டாங்காண்

வலியவெமன்ராஜ்ஜியத்தில் வாழரசனரண்மனைக்குள்
அலியார்மணமுடிக்க வானதொருபெண்மயிலாள்

இருப்பதாலங்கே யிருக்கிறதுவான்புரவி
பொருப்பதுவுஞ்சொல்லிப் போயினார்வானவரும்

நன்றியுள்ளவார்த்தை நல்மாராயங் கேட்டு
அன்றுநபியிறசூ லல்லாதனைப்புகழ்ந்து

வானவருமப்போ வரைந்தஉரைப்படியாய்த்
தானேயலியார்க்குத் தானுரைத்தாரம்மானே

அப்போதலியார் மன்புடனே ஏது சொல்வார்
தப்பாதிறை யோனருட்டந்தூதரானவரே

உம்முடையதன்புதல்வி யுண்மையுடனேயிருக்க
இம்மைதனிலேயொருபெண்ணிப்போதுகொள்வேனோ

என்றுசொன்னவுடனே இறசூல்நபிகேதுரைப்பார்
நன்றியுள்ளவலியே நான்சொல்வதைக்கேளும்

துய்யபுகழுடையோன்சொன்னபடி தப்பாது
ஐயமில்லையென்று மலிதமக்குத்தாமுரைத்து
போற்றுமெமன்ராஜ்ஜியத்திற் புரவியும்வாளதுவும்
பார்த்துவரச்சொல்லி பயகாம்பரலிக்குரைத்தார்
என்னைப்படைத்து இரணமிகவீபவனே
துண்மைக்குபிரைவெட்டித் தீன்வளரச்செய்தவனென்
றப்போதலியா ராலநபிதாள்பணிந்து
செப்பமுடனேபுரவி தேடுதற்கெழுந்திருந்தார்
கையிற்கதையெடுத்துக் கடுகவெழுந்திருக்கையிலேயே
துய்யவிபுரூஹீம்நபி தொழுதலுகர்தானுச்சு
அந்தநேரந்தொழுது மாதியிடத்தில்துவா
சிந்தைமிகமகிழ்ந்து தீர்க்கமாய்க்கேட்கலுற்றார்
வாசியுடன்வாளும் வரவிட்டவல்லவனே
தூசியிலேபறக்குந் துல்துலையும்பார்த்துவர
உன்னுதவி வேண்டுமென் றுகந்தலியார்போற்றிசெய்து
மன்னவர்நபியிடத்தில் வந்துவிடைகேட்டார்கள்
கேட்டவுடனேநபியும் கிருபையுடன்பார்த்துரைப்பார்
வாட்டமில்லாமலிப்போ வாளும்புரவியையும்
சிந்தைதளராமற் சென்றுபார்த்துவாருமென்றார்
அந்தவுரைகேட் டலியாருமிகவணங்க
அன்பாய்நபியிறசூ லென்றுவிடைகொடுத்தார்
இன்பப்புறவிதேட வெழுந்தாரலியாரும்

## அலியார் குதிரைத்தேடி எமன் பதிவருதல்.

நடந்தாராமந்நேரம் காயனுதவியினால்
அடர்ந்துஎமன்ராஜ்ஜியத்தி லசரோகுத்திற்போயினரே
போனவுடனலியார் பெரியோன்றனைவணங்கத்
தானுய்மலையருகே தானின்றுபாங்குசொன்னார்
பாங்குசொன்னபோதே வான்மலையுந்தானசையும்
பாங்காய்மலையிருந்த பப்பரத்தியார்தளமும்
வானிடியைக்கண்ட மஞ்சையது போல்நடுங்கி
தானேவிழுந்து தயங்கிமயங்கினரே
செவியடைத்துக்கண்கள்ரெண்டுஞ் சிதறடுத்தமாதிரி
புவியில்விழுந்தரசன் பிணம்போலேதான்கிடந்தான்
மயக்கந்தெளிந்தரசன் மந்திரிமார்க்கேதுரைப்பான்
தயங்கும்படிசத்தமிட்ட தாருலகமெலாமதிர

வானிடியோதேவோ மற்றுமுள்ளஜின்தானோ
நானிலத்தேசத்தமிது நாமறியோமெப்போதும்

அரசனிவைகேட்க வதிலொருவன்றானுரைப்பான்
தெரியாதுயாரோ திருநகரில்வந்தார்கள்

மக்கமதினமிருந்து வந்ததாய்காணுதிவன்
மிக்கவேயிறைவனை மிகவேவணங்குதற்கு

சத்தமிடவேண்டுமாம் தன்மார்க்கமப்படியாம்
நித்தமஞ்சுவேளை நின்றுமங்கேகூப்பிடுவார்

மேற்குமுகமாக விழித்துமங்குதான்கிடந்து
தாக்குடைய நாயகனைத் தான்வணங்கிவாரெனவே

அந்தமொழிகேட்டரச னவனுமங்கேயேதுசொல்வான்
இந்தநம்மவூர்தனிலே யிவன்வரவுங்காரியமோ

குன்றுமலையுருட்டிக் கொல்லுமெனவேயுரைத்தான்
துண்டுமலையைப்போய் துணிந்துமவர்மேல் உருட்ட

புரண்டுவருங்கற்களெல்லாம் பெரியோனுதவியினால்
திரண்டலியார்மேலே சேரவிழுகாதாம்

பார்த்தரசனுந்தான் பதறித்திகைத்து நின்றான்
காற்றுப்பிசலதுபோற் கடிகிமலைவிட்டிறங்கி

வந்தானரசனவன் வல்லலியார்முன்பாக
அந்தமுடனவனு மார்ப்பரித்துநிற்கையிலே

அலியார் தொழுதிருக்குமந்தவிடந்தனிலே
வலியவரசனுந்தான் வல்லமையாய்வார்த்தைசொல்வான்

அங்கேரஞ்சுஜஅதி லலியாருந்தான் விழுவார்
மன்னவன் சேனையெல்லாம்வந்துவளைந்துநிற்க

வணக்கமுகந்தலியார் வல்லவனைத்தான்புகழ்ந்தார்
இணக்கமுடனிருந்தார் இறையோனருளாலே

கண்டரசனுந்தான் கைநீட்டிப்போராடச்
சென்றுவருகையிலே சீறுமலியேதுசொல்வார்

என்னைத்தொடவேண்டாம் இளமயிலேயிப்போது
மன்னனுக்கோராது மடமயிலேயிச்செயல்தான்

என்றலியார் சொன்னவுடன் இளவரசன்றான்கேட்டு
அன்றரசன்மகனார் ஆர்ப்பரித்துகண்சிவந்து

என்னடா சொன்னாய் யிராசரெல்லாம்பார்த்துநிற்கப்
பெண்ணென்று சொன்னபொய்யனேவுன்னுக்கறுப்பேன்

என்றரசன்மகனு ரிருகண் ணுக்தான்சிவக்து
சென்றுவருகையிலே சீறும்புலியலிபார்த்து

கையிலிருக்தவொரு கதையாலாடைதள்ளிவிட்டார்
மெய்யிலுடையாடை மேலோதுங்கிப்போனதுவே.

## பப்பரத்தியரசன் அலியாரால்பெண்ணுகி யரன்மனையிலிருக்குதல்.

ஆண்சொருபமாறி யரிவைமயிலாளாகி
பெண்சொருபமாகப் பெற்றரசனின்றதன்பின்

நிலைகுலைக்துமெய்மறக்து நீலவிழிகளைநோக்கி
தலைதிரும்பிப்பாராமல் தன்மனைக்குளேகினரே

அப்போதலியாரும் அல்லாதனைநினைத்து
செப்பமுடன்மதினு சேர்க்தார் மக்ரிபிலே

## அலியார் மதீனுவைச்சேர்ந்து நபியைக்காணுதல்.

சேர்க்துநபியுடைய சீர்பாதங்தெண்டனிட்டு
சார்க்தயமன் ராஜ்ஜியத்திற் றுனடக்தசேதிதனை

படிப்படியே சொல்லப்பயகாம்பர்தான் மகிழ்க்து
வடிவாறூஹம்மதரும் வல்லவனைத்தான்புகழ்க்து

நாயன்றனைவணங்க நல்லதொருமோதினைத்
தூயமக்ரிபுக்குச் சொல்லுமென்றூர்பாங்குதன்னை

அப்போதுமோதீ னகமகிழ்க்து துவாவோதி
செப்பமுடன் பாங்குதனைத் திறமாகச் சொன்னூரே

பாங்குசொன்னபோதே வல்லநபிஸஹாபாக்கள்
தாங்காமலேயொலுவுக் தான்செய்தார்யார்களுடன்

தக்கமக்ரிபுவுக்தான் றெழுதார்யாவர்களும்
மிக்கதொருயேசாவு மேலோன்றனைவணங்கி

நால்யார்கள் சஹாபிகளும் நன்னபியின்றுள்பணிக்து
கோலமனைதனக்குக் கொள்கையாய்த்தானடக்தார்

அவரவர்கள்தன்மனையி லன்புடனேபோயிருக்க
தவமாயமன்ராஜ்ஜியத்திற்றுனடக்குஞ் சேதிசொல்வாம்

ஏகனுதவியினுலிராசனும் பெண்ணுயிருக்க
வாகாயெமன்ராஜ்ஜியத்தில் வக்திருக்கும்வான்புரவி

தண்ணீரொசிவனங்கள் தானுமதிதீண்டாதாம்
மன்னனுதவியினுல் வாடாமலேயிருக்கும்

சங்கையுள்ளபுரவிக்குத் தண்ணீரைக்காட்டுதற்கு
அங்குள்ளோரைப்பார்த் தரிவையருக்தானுரைத்தாள்

அத்தலத்திலுள்ள வனைவர்களும்வான்பரியைப்
பத்தியுடனடத்திப் பரிவாய்த்தண்ணீர்காட்டி

வாரோமென்றுசொல்லி மாண்டாரனைவோர்கள்
தாரணியின் மன்னவர்கள் தானுகவந்தவரைக்

கடித்துயுதறிவிடுங் கத்தோனருளாலே
பிடிக்கவென்றுவந்தவரைப் பின்காலாலேயுதைக்கும்

வந்துபிடித்தரசர் மாள்வார்களப்போது
இந்தவிதமோராண்டிருந்த துவான்புரவி

ஒருவருஷமட்டு மூகந்திருக்குசாலையிலே
திருமதினுவில்நடந்த சேதிதனைச்சொல்லுகிறேன்

## தென்தேசம் சூர்ராசன் மதினுநகர்மேற் படையெடுத்து வருதல்.

தெற்கேயொருராஜ்ஜியத்தில் திரள்படையோடேயெழுந்து
தக்கப்புகழுடைய தானுமொருவாழரசன்

சூரனென்றுமரசன் தோன்றியேபடைகளுடன்
சேரவுமேவந்து திரண்டுபடைசேர்த்துக்

கனத்தபடையுடனே கடல்போலசூழ்ந்துவந்து
சினந்துமதினுநகரஞ் சேரவேதான்வளைந்தார்

படைகள்வந்துவளைந்தவிதம் பயகாம்பர்தான்பார்த்து
உடையோனைத்தானினைந்து வுள்ளமிகச்சலித்தார்

## நபிக்கு ஜிபுரியில் தூதுசொல்லல்.

அப்போதுநாய னன்பாய் ஜிபுரியீலை
செப்பமுடனழைத்துச் செப்புவானப்போது

காவலுடன்சேனை கனத்தபெரும்படையாய்த்
தாவிமதினநகர் தான்வந்துசூழ்ந்தார்கள்

இந்தபடைதனக்கு என்றேழமூர்முஹம்மதனுர்
எந்தவிதம்போவோமென்று எண்ணிமனஞ்சலித்தார்

நல்லதுவானவரே நபியிடத்தினீர்போய்ச்
சொல்லிவருவீரெனச் சொல்லவிறையவனும்

அந்தநல்லசொற்கே டன்பாய் ஜிபுரியீலும்
வந்துமதினநகர் வள்ளல்முஹம்மதர்க்கு

இறையோன்சலாஞ்சொல்லி யெடுத்துரைப்பார்நன்னபிக்கு
கரைசேர்க்கு நன்னபியே கத்தனுமக்குச்சொன்னுன்

வானங்குவிந்ததுபோல் வந்தபெரும்படையைத்
தானேநீர்கண்டுதான் சலிக்கவேண்டாமென்று

எதிர்ப்பாலையமவகுத்து எதிராளிதன்படையைக்
கதிப்பாய்ப்பொருதிடவே கத்தனுரைத்தான்காண்
வல்லோன்ஜிபுரையீலும் மூஹம்மதரிடஞ்சொல்லி
நல்லசொர்க்கலோகம் நாடியேசென்றதன்பின்
அப்போதுநபியிறசூலன் பாகமோதினிடஞ்
செப்பினூர்மதினநகர் சேர்ந்ததொருவீதியெல்லாம்
ஒக்கப்பறைபோட் டொருகொடியில்வாருமென்றார்
ஹக்கனபியிறசூ லன்பானசொற்படியே
பட்டணங்கடோறும் பறைபோட்டொருகொடிக்குள்
திட்டமுடனபிமுன் சென்றூர்காணம்மானே
அறைக்தவிசேஷங்கேட்டு யார்களசுஹாபிகளும்
நிறைநிறையாய்ச்சூழ்ந்துநின்ணயமா யெல்லோரும்
வந்தார்நபிமகிழ வானங்குவிந்ததுபோல்
அந்தநல்லவேளையிலே யாலநபிதாள்பணிந்து
ஏதுவிடையெங்களுக்கு ஏகன்றிருநபியே
நீதியுடனருளுமென்றூர் நிச்சயமாய்நபியுரைப்பார்
அலியார்வரவுமில்லை யமர்புரவிவாளுமில்லை
சலியாமலேயடையைத் தானேபொருதவென்று
கம்பர்தனைக்கேட்கக் கம்பரப்போதேதுசொல்வார்
சம்பாமுள்ளநன்னபியே சட்டமதாயானுரைப்பேன்
அலியார் சலிப்பாகி யவர்புரவியில்லாமல்
நலிவாகயிவ்விடத்தில் நாட்டமதாயிருப்பரென்று
அப்போதுகம்பருட னுலநபிதாமுரைப்பார்
இப்போதலிபுலிக்கு யிணக்கமுடனேசொல்லி
அழைத்துவாருமென்றூராலநபியிறசூல்
விழையுடனேகம்பர் வெற்றியுளதாள் பணிந்து
வாட்டமாயிருப்பதென வல்லோனலிபுலியே
கூட்டிவரச்சொன்னூர் குதாயிறசூல்நபியுமெனச்
சொன்னபொழுதே துங்கபுலியலியார்
மன்னிறையோனைப்போற்றி மனமகிழ்ந்துதானடந்தார்
அலியாரெழுந்துசென் றூலநபிதாள்பணிந்து
மெலியாமலேஇறையோன் வெற்றிபெற்றநாயகமே
ஏதுவிடையெனக்கு வென்றுமலியார்கேட்க
ஆதியக்தமில்லானருள் பெறுநபியுரைப்பார்
அறுசில்புலியலியே யரசர்களும்படைகூட்டிப்
பிரிசமுடன்வந்தார்கள் பெரியோன்புலியேயென்று

## நபிக்கு ஜிபுரியில்வந்து தூதுசொல்லல்

அலியார்க்குநபியுரைக்க வன்புடையநாயனுந்தான்
வலியஜிபுரியீலே வாருடனேகூவிச்சொல்வான்

என்னுடையதோழர் இறசூல்முஹம்மதர்க்குச்
சொன்னேன்சலாமென்று சூழ்படைக்குயஞ்சாமல்

சிந்தைமிகமகிழ்ந்து சீக்கிரத்திற்சென்றுநின்று
விந்தையுடன்காபர்படை வெல்லாதெனைநோக்கி

ஆலநபிகரத்தா லள்ளியொருபிடிமண்
சீலமுடனெறியச் செப்பும்பகைவர்கள்மேல்

பட்டுமடிவார்கள் பாழுங்குபிரர்படை
கட்டியாய்மடிந்தவர்போல் நானிலத்தில்நின்றவர்கள்

ஆலநபிநீனிலவர் வருவாரென்றுசொல்லிச்
சீலமுடனபிக்குத் திரள்படைகள்வேண்டுமென்றார்கள்

வானவர்கள்கோடி வல்லமையால்வருவாரென்றுந்
தானேபடைபொருதச்சொல்லித் தான்திரும்பிவாருமென்றான்

வாருமென்றுசொல்லி வல்லோனுரைத்திடவே
ஊருந்தலமுமில்லா னுரைத்தவகைப்படியே

நன்றெனஜிபுரியீலும் நாட்டமுடன் வந்திறங்கி
அன்றுதிருநபிமுன் அன்பாய்ச்சலாமுறைத்துக்

கத்தன்சலாமுரைத்துக் கவலுற்றான்வகைப்படியே
உற்றஜிபுரியீலு முரைத்தேயகன்றவுடன்

ஆண்டபெரியோனருளுதவி யானதெல்லாந்
தாண்டுபரியார்களுடன் றானுரைத்தாரம்மானே

உரைத்தநபியிறசூ லுண்மையுடனேயெழுந்து
விரைந்தசமர்வெளியில் வேதநபி தானடந்தார்

## மதினநகர் நபியிறசூல் காபர்மேற் படையெடுத்து போகுதல்

அந்தநல்லவேளையிலே யார்களசுஹாபிகளும்
சிந்தைகலங்காமல் சீக்கிரமாய்படையெழுந்தார்

அப்போதுகாபர்படை யலைகடற்போலெழுந்து
தப்பாமலேயெதிர்த்துத் தான்வெளியேவந்ததுவே

வடகடலுந்தென்கடலு மற்றுமுள்ளகீழ்கடலுந்
திடமுடனே மேற்கடலுந் திரண்டுஎதிர்த்தார்ப்போல்

ஆலநபிபடையை யப்போதுதான்வளைந்தார்
சீலமுடனேதான் சேர்ந்ததொருதன்படையை

வந்தபடைதனக்கு வகைசெய்யமாட்டாமல்
சிந்தைகலங்கி திரளாகநின்றிடவே
வல்லோன்நபியிறசூல் வானவந்தானசொன்னபடி
நல்லதொருமண்ணையள்ளி நாடிப்படைதனிலே
எறிந்தார்நபிகரத்தா லெங்கும்போய்தான்விழவே
வருந்தியொருபிடிமண் மலைபோலேதானாகி

### காபர்படைமடிந்து தப்பியபேர் தீனாகித் தங்கள் பதிசேர்தல்

வானவர்கோன்சொன்னபடி மடிந்ததுகாபர்படை
தானேமடிந்ததுபோய்த் தான்மிஞ்சிநின்றவர்கள்
அஞ்சிப்பயந்தவர்க ளாலநபிதாள்பணிந்து
கொஞ்சிநபிகலிமாக் கூறினாரெல்லோரும்
கலிமாவுஞ்சொன்னதின்பின் கத்தனுதவியினால்
சலியாமற்றன்னகர்க்குத் தானேகிப்போனபின்பு
மன்னர்நபியிறசூல் மற்றுகாலியார்களுடன்
நன்மைசஹாபாக்களுடன் நன்மதினமாநகரில்
சிந்தைமகிழ்ந்திருந்தார் சேனைகளெல்லோரும்
முந்தவுதித்த முஹம்மதிறசூல்நபியும்
சல்லாபமாய்மகிழ்ந்துச் சாற்றுவார்யார்களுடன்
எல்லோருந்தன்மனைக்கு ஏகுங்கள்நீங்களென்று
சொன்னவுடன்யார்களும் சூழ்ந்த அசுஹாபிகளும்
அந்நேரந்தன்னி லருட்படியே யெல்லோரும்
சங்கையுமாகத் தானேயவரவர்கள்
திங்கள்நபிதாள்பணிந்துச் சென்றார்காணம்மானே
போனாரதின்பிறகு புதியோன்நபியிறசூல்
தானுமணிமாளிகைக்குள் தான்மகிழ்ந்துபோயினரே

### ஜிபுரியில் தூதுவந்து நபிக்குச் சொல்லுதல்

அப்போதுநாய னன்பாய்ஜிபுரியீலை
செப்பமுடன்அழைத்து செப்புவானோர்வசனம்
ஆலநபிதமக்கு மன்புடனேயெந்தன்சலாஞ்
சீலமுடனுரைத்துச் செப்புவீரிச் சேதிதனை
அலியார்குதிரையது மன்னனெமன்ராஜ்ஜியத்தில்
நலியாமற்போனதைத்தான் நாட்டமுடன்தேடுதற்கு
அலியாருந்தான்போக வாண்டவனுரைத்தேனென்று
வலியமுஹம்மதுக்கு வகையுடனே சொல்லுமென்றான்

என்றுரைக்கநாய னிறையோருமண்ணிறங்கி
அன்றுநபியருகே யன்பாய்ச்சலாமுரைத்து
நாயன்சலாமுரைத்து நாட்டமுடனேதுரைப்பார்
தாயோனுரைத்தபடிச் சொல்லியங்கேதான்மறைந்தார்

அப்போநபியிறசூ லலியார்தமையழைத்துச்
செப்பமுள்ளவானோர் சொன்னசேதிவுரைப்படியே
குதிரைதனைத்தேடிக்கொண்டு வரப்போவீரென்றார்
ஏதுவேஷங்கொண்டு இப்போதுபோவேனென்றார்.

### ஜிபுரியில் வளையல்கொண்டுவந்து கொடுத்தல்.

அப்போதிறையவனு மன்பாகஜிபுரியீலே
செப்பமுடனிறங்கிச் சிங்கப்புலியலிக்கு
வளருமெமன்ராஜ்ஜியத்தில் வான்புரவிதேடுதற்கு
வளையற்செட்டிவேஷம் வயணமாய்தானெடுக்க

பாசமுள்ளசொர்க்கமதிற் பாங்கானவளையல்விற்கும்
வேஷமெல்லாங்கொண்டு விதமாகமண்ணிறங்கி
பயகாம்பர் திருச்சமுகம் பாங்காகவையுமென்றான்
வயணமாய்வல்லோனுரைக்க வந்தார்ஜிபுரியிலும்

வந்தார்நபியிடத்தில் வைத்தஅந்தவேஷமெல்லாஞ்
சுந்தரம்சேர்வேஷமெல்லாம் தூயோநபிதானெடுத்து.

### அலியார் வளையல்செட்டி வேஷம்பூணுதல்.

அப்போதலியாரை அன்புடனேவேஷமெல்லாத்
தப்பாமற்போடுமென்றார் தானலியாரந்நேரம்
நெற்றியிலேபொட்டுக்கட்டி நேயவுருமால்கட்டி
பத்தியுடனேவளையல் பாங்காகத் தோளிலிட்டு

கம்பளியும்மேற்போட்டுக் கையுற்றடியெடுத்து
நம்பிநபிதாள்பணிந்து நாடிவிடை தாருமென்றார்

அப்போநபியிறசூலகமகிழ்ந்து தானுரைப்பார்
செப்பமுடனேயலியே சீக்கிரம்போய்வாருமென்றார்
சங்கையலிவிடைவாங்கித் தனியோனுதவியினால்
துங்கப்புலியலியுந் தூயளுஹர்தொழுது.

### அலியார் வளையல்செட்டியாக எமன்பதிக்குப்போகுதல்.

செப்புந்நபிதாள்பணிந்து சிறப்பாய்வெளியில்வந்து
தப்பாமலேபாதை தானோக்கிடந்தனரே

நடந்துயெமன்ராஜ்ஜியத்தில் நாட்டமுடனஸறுக்குத்தில்
அடர்ந்துபுகழலியா ரன்பாகப்போய்ச்சேர்ந்தார்
போனவிடத்திற் புகழ்பெரியராசனிடம்
ஆனதொருசிங்காரத் தோப்பூரணியருகே
வளை யற்கடைவைத்தார் வல்லவலிபுலியார்
பழயதொருதோப்பைப் பார்க்கவந்தசேவகர்கள்

வந்தவர்களேது சொல்வார் வாகுடையசெட்டியாரே
இந்தநல்லதோப்பி லெவர்வளையல்கொள்வார்கள்
பட்டணத்துவீதியிலே பாங்காகக்கடைவைத்தால்
திட்டமுடன்கொள்வரென்று சேவகருந்தாமுரைத்தார்
அப்போதலியாரு மவர்களுடனேதுசொல்வார்
தப்பாமயென்வளையல் தாரணியோர்கொள்வார்கள்

நாயனருட்பெருகு நல்லதொருஎன்வளையல்
ஆய்ந்தநல்லதோப்பி லருகூரணியருகில்
கொண்டுகடைவைப்பேன்நான் கோலமுள்ளராசன்மகள்
தண்டிகையில்லாமற் றான்வந்துகொள்வதல்லால்
மற்றொருவர்கொள்வதில்லை மன்னன்சேவகரேயென்று
பக்தியுள்ளசெட்டிசொல்ல பட்டணம்போய்ச்சேவகரும்

அரசன்மகள்சமூகம் அன்பாகவேயுரைக்கப்
பிரியமுடன்ராசன்மகள் பெருமையாய்தானெழுந்து
வீறுடனேதாதியர்க்கு விகிதமாயேதுசொல்வார்
ஆரோதெரியாது வன்புடனேதோப்புகளில்
வளையற்கடைகளை வைத்திருக்குஞ்சேதிதனை
பழையதொருசேவகன்றான் பாங்காகவந்துரைத்தான்

ஆகையினாலேயன்புடனே நீங்கள்சென்று
வாகானசெட்டியையும் வரவழைத்துவாருமென்றார்
அப்போதுசென்றார்க ளன்புடனேதாதியர்கள்
தப்பாமலேநடந்தார் தானமந்ததோப்புகளில்
சென்றாரொருமனதாய் சேரவேதாதியர்கள்
கண்டார்வளையல்தனைக் கனகமுற்றதாதியர்கள்

ஏதுக்காணிவ்வளைய லிப்புவியிற்செட்டியாரே
சோதிவொளிவுடைய துய்யதொருதன்வளையல்
விலைகள்சொல்லும்செட்டியென்ன விதமுடனேசெட்டிசொல்வார்
மலைகளதுபோல மாடதங்கந்தான்குவித்தால்
தருவேனொருவளையலென்று தானுரைத்தார்செட்டியாரும்
பருவமுள்ளதாதியர்கள் பதில்வார்த்தையேதுசொல்வார்

சொன்னவிலைதருவோம் துய்யதொருசெட்டியாரே
மன்னரசியரண்மனைக்குள் வாருமென்றுதானழைத்தார்
நல்லதென்றுவளையல் செட்டிகாட்டமுடனேநடந்து
வல்லரசியரண்மனைக்குள் வந்தார்வளையல்விற்க
அலியார்செட்டிவரக்கண் டானதொருநன்புரவி
வலியவனுமானித்து வாய்விட்டேகூவிடுமாம்.
அப்போதரசன்மக ளானதாதியைப்பார்த்து
செப்புவாரப்போது செம்மையுள்ளதன்புரவி
வந்துவொருவருஷம் வாய்விட்டுக்கூவவில்லை
இந்தவளையல்விற்கு மிப்பெரியசெட்டியாரைக்
கண்டனுமானித்த காரணந்தானே தெனவே
என்றுசொல்லி அலியாரு மெத்துரைப்பாரந்நேரம்
அரசன்கண்விளக்கா யானதொருகன்னியரே
புரவியனுமானித்த புதுமைதனைச் சொல்லுகிறேன்
மதினாநகரத்தில் முஹம்மதிறசூல் மருகர்
நதியிலலியாருந் தானேறும்புரவியிது
அவர்களரண்மனையி லன்புடனேயான்சென்று
கவனமுடனல்ல கனகவளையல்விற்பதுண்டு
அப்போபுரவி யறிந்திருக்குமென்றனையுந்
தப்பாமலேயதற்குத் தண்ணீருங்காட்டுவேன்
ஆனதினாலென்னை யறிந்தனுமானிக்கிறது
தானமுடனிறையோன் தன்னருளாலென்றுரைத்தார்
அப்போதரசியரு மதிசயமாய்த்தான்கேட்டு
இப்போதுசெட்டியாரே யென்னவிலைவளையலென்றாள்
என்றுசொன்னபோதே யிறசூல்மருமகனார்
அன்றலியாரு மதற்குவிலைசொல்லிடுவார்
மலைகளதுபோலே மாடதங்கத்தான்குவித்தால்
சிறுநாதலின் விழியாரே சேர்ந்தவளையல்கொடுப்பேனென்றார்
நல்லதென்றுசொல்லி நங்கையருந்தானெழுந்து
வல்லபமாய்த்தங்கம் மலைபோலேதான்குவித்தார்
அந்நேரந்தானே யலியென்னுஞ் செட்டியாரும்
வன்னமுடன் வளையல்தனை வகைவகையாய்த்தான்பார்த்து

### அலியார் பப்பரத்தியாருக்கு வளையல் கொடுத்தல்

கோவராசன்பெற்ற · கோலமுள்ளகன்னியரைப்
பாவனையாய்க்கைபிடித்துப் பாங்குடனேகெட்டையிட்டு

கையைப்பிடித்திழுத்துக் கருணையுடன்றான் முறுக்கி
வையமெல்லாந்தானறிய வளையற்றொடுத்திடுவார்

வளையற்றொடுக்கும்போது வல்லவனுந்தானுரைப்பான்
இளமயிலாள்கொடுத்ததங்க மெந்தனலியேவுமக்கு

கொடுத்தபரியமென்று குதாவுரைத்தானப்போது
தொடுத்தவளையலெல்லாந் தோகையர்க்கினமதுவாம்

என்றுரைக்கநாய னின்பமுள்ளசத்தமது
அன்றலியார்செவியி லன்புடனேகேட்டிடவே

மன்னரலியாரு மனமகிழ்துமப்போது
என்னுடையநாயகனே யெனக்குதவிசெய்வாயென்று

வரிசைப்புலியலியு மன்னன்மகள்தன்னுடனே
பிரியமுடன்சொல்வார் பிரவிக்குநீர்காட்டி

வாரேனென்றுசொல்ல மங்கையருமேதுசொல்வார்
பாரிலுள்ளவரசர் பாங்காகவந்துலந்து

பிடித்துநீர்காட்டவென்று பேசிவந்தமன்னர்களை
கடித்தெழுபதுபேரைக் கண்காணக்கொன்றதுகாண்

இந்தப்புரவிதன்னை இப்போதுநீரவிழ்க்க
சிந்தைமகிழ்ந்துரைத்தீர் சேதியல்லசெட்டியாரே

உன்னையதுகடித்து உதறிவிடும்பாராமல்
என்னைப்படைத்த விறையவனுந்தான்பொறுக்கான்

என்றுரைத்தராசகன்னிக் கேழையலியேதுசொல்வார்
கொன்றுபோட்டாலுமென்னைக் குற்றமில்லையுந்தனுக்கு

ஆதியருளாலே யவிழ்த்துமங்கே நீர்காட்டி
நீதியுடன்வருவேன் நில்லுமிங்கேகன்னியேநீர்

கொடுத்ததிரவியமும் கூறும்வளையலுந்தான்
எடுத்துநான்போகவில்லை யிருக்கட்டுமிவ்விடத்தில்

என்றுபுரவிதன்னை யின்பமுடன்றானவிழ்த்து
அன்றிறையோனைப்புகழ்ந் தன்புடனேயேறினரே

ஏறினாலிபுலியு மிறையோனருளாலே
பாரமுடனேயேறிப் பாங்காய்வெளியில்வந்தார்

நடத்திப்புரவிவிட்டு நாட்டமுடன் காபிர்களை
அடர்ந்துகலிமாவை யெல்லோருஞ் சொல்லுமென்று

சத்தமொன்றுபோட்டார் தார்வேந்தரலிபுலியார்
மெத்தவெகுதுலைவில் விண்ணடிந்தவாறதுபோல்

ஆலகபிமருக ரார்ப்பரித்துக்கோட்டைதனில்
காலுதிக்குஞ்சென்று நாட்டமுடன்சத்தமிட்டார்

சத்தமிட்டப்போதே தானுமந்தக்கோட்டையெல்லாம்
மெத்தவுமிடிந்திடுமாமிகுந்தபுத்து வீழ்ந்திடுமாம்

அந்நேரமேகலிமா ரார்ப்பரித்துக்காபிர்களை
இந்நேரமேயலியார் இயல்புமென்றுதானுரைத்தார்

அப்போதுகலிமாவை யன்புடனே சொன்னார்கள்
துப்புரவாய்க்கலிமாவைச் சொல்லாத காபிர்களை

வெட்டிக்கருவறுத்தார் வீரப்புலியலியார்
மட்டில்லாச்சேனை மடிந்துபோய்மற்றுமுள்ளோர்

திட்டமுடன்கலிமாச்சொல்லி தீனவர்களானார்கள்
சட்டமுள்ளவரசன் மகள் தன்னுடையமந்திரியும்

எல்லாருந்தானாகி யிறசூல்நெறியில்வந்தார்
வல்லரசன்மகள் மற்றுமுள்ளோர்தீனைபின்

## அலியார் குதிரையைக்கொண்டு மதீனமாநகரஞ் சேர்தல்

வட்டமிடும்பரியை வல்லரலிதான் திருப்பி
யட்டதிக்கும்போற்று மருள்மதீனம் வந்தனரே

வந்தமகரிபுவில் வல்லநபிதாள்பணியச்
சிந்தைமகிழ்ந்து செப்புவார்நன்னபியும்

நல்லவலிபுலியே நாட்டமுடனீரேகி
வல்லமையாய்வந்த வகைவிபரஞ்சொல்லுமென்றார்

அப்போதலிபுலியார் அன்புடனேயேதுரைப்பார்
செப்புயெமன்ராஜ்ஜியத்தில் சேர்ந்தஜனங்ளெல்லாம்

கலிமாவுரைத்தார்கள் கர்த்தனுதவியினால்
சலியாமையெல்லோருந்தான் தீனவரானார்கள்.

வெற்றிபெற்றவாறதனை வேங்கையலிசொன்னவுடன்
உற்றதிருநபியு முகந்திருந்தாரம்மானே

ஆதிநபியிறசூ லன்புடனேமோதீனை
நீதியுள்ளபாங்குதனை நிச்சயமாய்ச்சொல்லுமென்றார்

சொல்லுமென்றுசொன்னவுடன் துய்யவொருமோதீனும்
நல்லதொருபாங்குதனை நாட்டமுடனுரைத்தார்

அப்போமகரிபுவி லாலகபியார்களுடன்
செப்பமுள்ளஸஹபாக்கள் சேர்ந்து தொழுதனரே

இஷாவொகுத்து மிதமுடனே தான்தொழுது
கூசாமலேயலியார் குதாயிறசூல்தாள்பணிந்து

தங்களிடமாளிகைக்குத் தானும்புரவியுமாய்ப்
பொங்கமுடன்சேர்ந்து புரவிகட்டித்தானிருந்தார்

வானோர்புகழிறசூல் மன்னவருந்தானெழுந்து
கோனருளாற்சென்றார் குலவுகின்றமாளிகைக்குள்

யார்கள்ஸஹபாக்களவரவர் தன்மனைசேர்ந்தார்
பாருலகிலெமன்பதியின் பன்மைசொல்வேனம்மானே

### எமன்பதியில் பப்பரத்தியார் நாயனைப்புகழ்தல்.

எமனென்றபட்டணத்தி லிறந்தவர்போய்மற்றுமுள்ளோர்
சாமுதல்லவரசன்மகள் தானிஸ்லாமானதன்பின்

வல்லஇறையவனை வணங்கியிருந்தனரே
நல்லவரசன்மகள் நங்கையருமீதுரைப்பார்

அப்போதலியெனவே யறிந்துமவர்தீன்வழியில்
செப்பமுள்ளகலிமாத் தீன்வழியெல்லாமறிந்து

ஆதிமுதலோனை யன்புடனேதான்வணங்கி
நீதியுடனென்னை நீனிலத்திற்றான் படைத்துப்

பெண்ணென்றறியாமற் போற்றியெனைவளர்க்க
முன்னேயுதவிசெய்தாய் மெய்ப்பொருளானவனே

ஆணென்றுசொல்லி யரசாளவைத்தவனீ
காணவந்தமன்னரெல்லாம் கப்பங்கட்டவெந்தனுக்கு

ஒப்பஞ்செலுத்தி யுலகாளவைத்தவனீ
செப்பமுடனகரிற் சேர்ந்தகொலுவேளையிலே

அன்றலியாரைத்தா னனுப்பிவைத்தவல்லவனீ
என்றன்மறைப்புதன்னை யெவராறியமங்கையென்று

கனதியலியுரைக்கக் கட்டுமட்டாய்வைத்தவனீ
கினிதாயலியாரை யேகிவரவைத்தவனீ

அலியார்வளையல்தனை யன்புடனேகொண்டுவந்து
வலியவேயெந்தனுக்கு வளையலிடச்செய்தவனீ

இன்னமலியாருக்கு மெந்தனையோபாரியாகப்
பின்னுமுதவிசெய்வாய் பெரியோனேமெய்ப்பொருளே

காயமதாய்ச்செய்யாதி கர்த்தனேயென்றுமங்கை
நாயன்றனைவணங்கி நாளுந்து ஆச்செய்திருந்தார்

அப்போதுநாய னன்பினலியானவர்க்குச்
செப்பமுடனமுகாய்ச் சேதிசொல்வான்ஜிபுரீலுக்கு

தூதர்நபிதனக்குச் சொல்லுநீரெந்தன்சலாம்
நீதமுள்ளநாயன் நிச்சயங்களேதுசொல்வான்

வலியவெமன் ராஜ்ஜியத்தில்வாழுமரசன்மகள்
மெலிவாகமாறிதின மெல்லியறுந்தாள்சலித்து

இருக்கிறளென்று யேகனுரைத்தானென்றும்
பெருக்கநபிக்குச்சொல்லி பெரியோனலிபுலியை

ஏகிமணமுடித்து இப்போவரும்படியாய்
வாகாற்ஜிபுரீலுக்கு வல்லவனுந்தானுரைக்க

## ஜிபுரியில் நபிக்குத்தூது சொல்லல்.

அப்போதுவானவரு மன்புடனேவிண்ணிறங்கித்
தப்பாமல்நபியிறசூல் தம்முன்னே வந்து நின்று

தமதுசலாஞ்சொல்லித்தம்பிரான் சலாமுரைத்து
இமையோருமப்போ தேகனுரைத்தபடி

வகைவகையாய்ச்சொல்லி மறைந்தனர்காணம்மானே
தோகைவிசேடமெல்லாந் துய்யோனுரைத்தபடி

ஆலநபியிறசூ லலியார்தனையழைத்துச்
சீலமுடனிறையோன் செப்புமொழிதள்ளாமல்

தனமாமெமன்பதியின் கன்னியிடம்நீர்போய்
மணமுடித்துவாருமென்று வள்ளலிறசூலுரைத்தார்

வல்லநபியைபோற்றி வணங்கிமிகப்பணிந்து
நல்லதெனவேநடந்து நாட்டமுடன்மனையில்வந்து

செல்வநபிமகளாரைச் சிறப்புடனேதானழைத்து
நல்லவிபரமதாய் நாயகிக்குத்தாமுரைப்பார்

ஆண்டவனுரைப்படியே யாலநபிசொன்னதுவும்
வேண்டிமணமுடித்து விரைவில்வரசொன்னதுவும்

படிப்படியேசேதிதன்னைப் பாத்திமாவுக்குரைத்து
வடித்தபுகழிறசூல் மகளாரேயெனக்குவிடை

தாருமென்றேயலியார் தன்மையுடனேகேட்கப்
பாரில்மங்கையர் போற்றும்பாத்திமாவேதுசொல்வார்

வரிசையலியே மன்னவரேநீரும்மிப்போ
பிரியமுடனேநெடுநாள் போயங்கேதானிருந்தால்

வாடிமெலிந்திடுவேன் வள்ளல் புலியேயதனல்
நாடிப்போயொருகொடியில் நாட்டமுடன்வாருமென்றார்
நல்லதென்று சொல்லிநாட்டமுடனேயலியார்
வல்லோனருளாலே வருவேனென்றுதானுரைத்து
விடையதனைவாங்கியலி மேலோன்நபிமுன்வந்தார்
தடையறவேவந்துநபி தாள்பணிந்துமேதுசொல்வார்
தாலிகட்டகூறைமகர் தானமுதல்கள் தாருமென்றார்
அலியாருரைக்க வாலநபிதாமுஞ்சொல்வார்
இப்போதலியே யிறையோன் கிருபையினற்
செப்பமுடன் நீர்கேட்ட திரவியத்திற்குப்பதிலாய்
இன்றுரைக்கக்கேளு மிறையோன்புலியலியே
சென்றுகூசாத்தண்ணீருஞ் சிறந்தவொருரொட்டியையும்
கொண்டுபோய்க்கொடுநீர் குறித்தமகர்தனக்கு
என்றபோதேயலியா ரெழுந்துமேரொட்டியுடன்

## அலியார் யெமன்பதியில் மணமுடிக்கப்போகுதல்.

வாக்கின்படிகூசாவெடுத்து வள்ளல்நபிதாள்பணிந்து
தாக்குடனேசென்றார் தகையலிபுரவியின்மேல்
அந்தயெமன்ராஜ்ஜியத்தி லஸரொகுத்திற்போயினரே
சிந்தைமகிழ்ந்து சிறந்ததொருவீதியெல்லாம்
பெண்கூறியேவருவார் பெரியோனருளாலே
விண்டுசிதானெழும்ப விசையாய் நடந்துசொல்வார்
காசுபணமுமில்லை கைமுதலுந்தானுமில்லை
வீசுமுடுமானமில்லை வேண்டுமுதற்றானுமில்லை
கூசாதண்ணீரொட்டிக்குங் குறித்தமகர்தனக்கு
ஆசாரமாகப்பெண் ணுருங்கொடுப்பதுண்டோ
என்றுதெருவீதியெல்லா மேழையலிபெண்கேட்க
அன்றுதெருவீதியிலே யனேகம்பேர்கூடிச்சொல்வார்
மதியாமற்பெண்கூறி மணமுடிக்கவந்ததினல்
விதிவந்துமுடிந்திடுங்காண் வேறுதெருக்கேகுமென்றார்
போகுமென்றுசொல்லவலி பெரியோனுதவியினல்
ஏகிமறுதெருவில் ஏழையலிபெண்கேட்க
அத்தெருவிலுள்ளா ரப்படியேசொல்லிடுவார்
உற்றதொருவீதியெல்லா முண்மையலிபெண்கேட்டு
வந்தரசன்மகள் மாளிகைக்குமுன்னுக
வந்தனுக்குப்பெண்கொடுப்பா ரிங்குமுண்டோவென்றுரைப்பார்

அப்போதுதாதியர்களனேகம்பேரோடிவந்து
செப்பமுடன்பார்ப்பார் சிராய்புலியலியை
அதிலேயொருதாதி அரசன்மகள் தனனிடம்போய்
மதிபோல்மயிலினமே மங்கையரேகேளீர்
பெண்கேட்டுவந்ததொரு பக்தியுள்ளமன்னரைப்போல்
எங்கும்காம்கண்டதில்லை இறையோன திவான்கான்
வளையில்விற்கவந்ததொரு மன்னரைப்போல்காணுதென்றாள்
இளமையுள்ளராஜகன்னி மிதுவிபரங்கேட்டவுடன்
தானுமங்கேயோடிவந்து தயவாகப்பார்த்திடவே
தேனமுதைகண்டருந்துஞ் சிங்காரப்பைங்கிளிபோல்
பார்த்தரசன்மகளாற் பாங்காய்மனதிலெண்ணி
வேற்றுமனிதரல்ல வேங்கையலியாமெனவே
அலியாரென்றேயறிந்து யரண்மனையிலுள்ளழைத்து
கலியாமற்றூதியர்கள் கனிமலர்மெத்தையிட்டு
மெத்தையின்மேல்வந்திருக்க மெல்லியரும்தானுரைத்தார்
சித்தமகிழ்ந்தலியார் சென்றிருந்தாரப்போது
பப்பாரத்தியாரும் பாங்காகரேதுசொல்வார்
இப்போதுநீரு மிங்குவந்தகாரியமேன்
என்றவுரைகேட்டு யேகனலியேதுரைப்பார்
இன்றுவந்தகாரியந்தா னியம்புவேன்கேள்மயிலே
காசுபணமுமில்லை கனத்தமுதல்சேனையில்லை
கூசாமீரொட்டியுமகராய்க் கொடுப்பேனுன்பெண்டுனக்கு
இதுதனக்குச்சம்மதித்தால் யேகனுதவியினால்
ததியாய்மணமுடிக்கத் தான்வந்தேன்பெண்ணேயென்று
சொன்னமொழிகேட்டுத் தோகைமனமகிழ்ந்து
நன்னயமதாக நங்கையருஞ்சம்மதித்து
நானுமக்குப்பாரியென்று நவின்றமகர் சரியென்றுங்
தானுமலியாருஞ் சம்மதித்திருக்கையிலே
அந்தமொழிசொல்ல வரசன்மகள் தன்னுடைய
மந்திரிமாரையழைத்து வாருமென்றார்தாதியரை
தாதிகளோடித் தானுரைக்கமந்திரிகள்
நீதியுடன்வந்து நின்றதபுசெய்தார்கள்
மந்திரிகளைப்பார்த்து வகைவிபரந்தானுரைத்து
இந்தவிசேடமெல்லா மிதமாய்வரைந்தெனக்குக்
கப்பமிடுராசருக்கு கனவோலையனுப்புமென்ன
ஓட்டஞ்செலுத்திடுவோர்க் கோலைவிட்டாரம்மானே

அந்தமொழிகேட்டு அரசரெல்லாந்தானெழுந்து
வந்தாரலைகடற்போல் வான் பரிகள் சேனையுடன்

அரசரவர்க்கு மரண்மணையுந்தானியற்றிப்
பிரிசமுடனிருந்தார் பெரியோனுதவியால்

அலியாரிருக்கவொரு வரண்மனையுந்தான்கொடுத்துக்
கலியாணச்சோடினைகள் கட்டுமெட்டாய்த்தான்கொடுத்தார்.

நாட்டிலுள்ளபெரியோரும் நல்லவுலமாக்களுமாய்
கூட்டினாற்பந்தற்கால் குணமாய்ப்பவளத்தினால்

பந்தற்கால்தன்னைப் பரிவானரத்தினத்தால்
விந்தைவிந்தையாக விகசிதமாய்வேலைசெய்து

எல்லோருங்கூடி இயல்புடைய பாத்திஹாவை
நல்லாகவேயோதி நாட்டினார்பந்தற்கால்

பொன்னாலேவிட்டம் பொருந்தினாரந்நேரம்
நன்னயமாய்மேற்சிகரம் நாட்டினார்பந்தலுக்கு

சந்திரனைப்போலொளிவு தான்றுலங்கும்பந்தலெங்கும்
கந்தமலர்சென்பகமுங் கமுகமரமுநாட்டிக்

கட்டினாற்பொற்சரிகை கனகரத்தினப்பந்தலிலே
அட்டதிசையோர்மகிழ வலங்கரித்தார்பந்தல்தன்னை

கண்டவர்களெல்லாங் களிகூரப்பார்த்தனரே
கொண்டாடிவதிசயத்தைக் கொற்றவர்கள்தான்மகிழ்ந்தார்

அலியார்மணக்கோல மகிழ்ந்துபார்க்கவென்று
மலிவாயரசரெல்லாம் வந்திருந்தாரவ்வேளை

ஆலமிகப்புகழு மலியாரிதுநினைந்தார்
தாலியுடன்கூறைத் தகுமானதிரவியத்தைக்

கலியாணவேளையிலே காவலர்கள்முன்பாக
வலியவனைக்கேட்டாள் வல்லவனேயேதுசொல்வேன்

என்றலியாரு மிறையவனைத்தான்புகழ்ந்தார்
அன்றுஜிபுரீலை யாண்டவனுங்கூவிச்சொல்வான்

சொர்க்கந்தனிலிருக்குந் துய்யஹூறுனியை
வர்க்கமுடனாற்றில் மணமாய்த்தலைமுழுகி

பட்டுடுத்திநல்ல பலபணிகள்தான்பூண்டு
திட்டமுடன்ஹூறுகளைச் சேரவேதான்கூட்டி

அரசன்மகள்தனக்கு மன்பாகசோடிகள்
விரைவாய்ச்சொர்க்கமதின் வேண்டியதெலாமெடுத்து

தாலியுடன் கூறை தருமான வாசங்களும்
காலாழிபீலி கை வளையல் மோதிரமும்

மைக்கூடுஞ்சிப்பு மற்றுமுள்ள பாவாடை
கைக்குபாசுபந்தும் கனகரவிக்கைகளும்

நடைக்கழகா யிருக்கும் நன்னயத்திற் பாடகமும்
இடைக்கியுகந்த யெழி லொட்டியாணமுடன்

சிலம்புடனே கூந்தலுக்குச் சிறந்தசுட்டிதானெடுத்து
துலங்க நல்ல வாலாத்தித் தோகையர்களை கூட்டி

இத்யாதிபோகமதா யெமன்பதிக் கனுப்புமென்ன
கத்தனுரைத்திடவே கனமான ஜிபுலறையிலும்

கட்டும்பணிகளெல்லாம் கணக்கி லடங்காதெடுத்து
திட்டமுடன்வானவர் சிறந்த பேர்லச்சமுடன்

## எமன் பதிக்கு வானவர் வந்து அலியாரிடம் வரிசை பணிகள் கொடுக்குதல்

சுவர்க்கமனதுடனே சொகுசாயலங்கரித்து
வர்க்கவெம ராஜ்ஜியத்தில் வந்தார்கள் வானோர்கள்

சங்கையுடனலிமுன் தான்போய்யெல்லோரும்
மங்களமாய்ப் பணிகளெல்லாம் வள்ளலிடங் கொடுத்தார்

வாங்கியலியாரும் வல்லவனைத்தான்புகழ்ந்து
பாங்காயிருக்கையிலே பார்புகழும்வானோர்கள்

ஏழையலியாருக்கு மின்பமுள்ளமாளிகையைச்
சூழவலங்கரித்தார் சுவர்க்கப்பதிபோலே

அந்தபடியே யரசன்மகள்மாளிகையுஞ்
சிந்தைமிகுமந்திரிகள் சிறப்பாயலங்கரித்தார்

அந்நகர்வீதியிலே யங்குள்ளகுடிகளெல்லாஞ்
சொர்ன்ன மயமாகச் சோடித்தார்வீதியெங்குஞ்

பச்சையிலைத்தோரணங்கள் பாங்காகக்கட்டிவைத்து
இச்சையுடன்யாவர்களு மினிதாக வீற்றிருந்தார்

சங்கையுடன் தேசமெங்குந் தானேயலங்கரித்துப்
பொங்கமுடன்யாவர்களும் புகழ்ந்தேமகிழ்ந்திருந்தார்

அந்நேரங்கோவராஜ னன்புடனேயீன்றெடுத்த
கன்னியருந்தோழியுடன் கருத்தாகவேதுசொல்வார்

வாகாயலியாரை மணக்கோலமேகொண்டு
தாகமுடனேவருகத் தான்போய் நீ சொல்லுமென்றார்

சொன்னமொழிக்கேட்டுத் தோகையர்களோடிவந்து
மன்னரலியிடத்தில் மகிழ்வாகச்சொல்லியபின்

அலியாருமப்போ அன்பாகத்தலைமுழுகி
வலியோனருளாற்பணிகள் வகைவகையாய்தானணிந்து

துல்துல்பரியேறிச் சுரரோடெல்லாஞ்சூழ
வல்லோனருளாலலியும் வந்தாரேஊர்கோலம்

பேரிகைடம்மாளம் பெரியதவுல்முரசும்
பூரிகைவல்லாரி புதியதவண்டைகளும்

நாகசுரந்துத்தியுடன் நற்கோணக்கொம்புகளும்
பாகமுடசங்கிதம் பாடிவரப்பா வலர்கள்

மத்தளங்கைத்தாள மற்றுமுள்ளவாத்தியங்கள்
பத்தியுடன்மாதர்கள் பாடியேயாடிவர

இந்தவிதமாக வேதனலிபவனிவர
அந்தநகருள்ளே ரவர்களுமேதுசொல்வார்

வந்தாரொருவராய் வாருடனே ஏழையைப்போல்
இந்தபுதுமைகளை யாவர்களுமறியாமல்

நல்லவர்க்கும்பெண் ணு நாம்கொடுக்கமாட்டோமென்று
சொல்லிவிட்டோமெனவே தோகையருமன்னவரும்

அரசன்மகளையிவர்க் காண்டவனமைத்தானென்று
பிரியமுட னுரைத்துப் புகழ்ந்தாரனைவர்களும்

அப்போதலிபவனிவர அரசன்மகள்தான்பார்த்துத்
தப்பாதிறையோனுக் தானுதவிசெய்தானென்று

சிந்தைமகிழ்ந்திருந்தார் தேன்மொழியாரப்போது
வந்தமலக்குகளும் வல்லோன்புலியலியும்

ஜென்னத்துமேளம் சிறப்புடனேயான்முழங்க
விண்ணதிருடம் மாளம் மேகத்திடிபோல்முழங்க

தேர்வாணதிர்வெடிகள் தேசமெங்கு முழங்கிவர
பார்ப்புகழுமத்தாப்பு பகல்வற்றியேற்றிவர

பேரிகைசத்தமது பெருவானத்திடிபோல
வாரிமலையதிர மண் ணுவிண் ணுந்தானதிர

பேருயமன்பதியிற் பெரும்வெளிச்சமாகிடவே
ஊர்கோலம்வந்தார்கா ணுலகமெலாந்தானறிய

கொண்டுவந்துவிட்டார்கள் கோலமணப்பந்தலிலே
அன்றுமணவறையி லரசுபுலிவீற்றிருந்தார்

வந்திறங்கியேயிருக்க வானவரும் ஹூறவரும்
இந்தவுலகுதனி லிருக்குமனிதரைப்போல்
கோவரராசன்பெற்ற குறித்ததொருகன்னியர்க்கும்
பாவனையதாகப் பாங்காய்வரிசைதனை

எந்தினார்வானவர்க ளேகனருளாலே
பாக்தமுடன் பட்டுகளும் பனிவகைகள் தானெடுத்து

வந்தாரொருமனதாய் மன்னன்மகளரண்மனைக்குள்
இந்தப்புதுமையெல்லா மேந்திழையார் தான்பார்த்து

வல்லோனெனக்கு வரவிட்டவரிசையென்று
நல்லதொருநேரத்தில் நலங்கிட்டுதலைமுழுகி

பட்டுடுத்திமையிட்டுப் பாங்காய்ப்பணிபூண்டு
இட்டமுடன்தானே யிருக்குமந்தவேளையிலே

அப்போதேயாண்டவனுமருளுவான் மலக்குகட்குச்
செப்பமுள்ளஜிபுரியீலுஞ் சேர்ந்தமுன் மலக்குடனே

நாலுமலக்குகளும் நாட்டமுடனேயிறங்கி
ஆலநபிமருக ரலியாரவர் தமக்கும்

வலியயெமன்ராஜ்ஜியத்தில் மன்னன்மகள்தனக்கும்
கலியாணமுடித்துக் கடுகவாருங்களென்றான்

## அல்லாஹ் வுரைப்படி நான்கு மலக்குகள் இறங்கி அலியாருக்கும் பப்பரத்தியாருக்கும் நிக்காஹ் முடிக்குதல்

என்றிறையோனுரைக்க வெழுந்தார்கள் நால்மலக்கும்
அன்றியெமன்ராஜ்ஜியத்தி லலியிருக்குமணவறையில்

வந்துமிறங்கினார்கள் வானவர்கள்நால்வர்களுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயலிதமக்குங்

கொத்துபாவோதினார்கள் கோமானருளாலே
உற்றதொருநிக்காஹை யுகப்பாயெழுதினார்கள்

எழுதிமுடிந்தபின்பு ஏகன்புலியலியை
பழுதுவினைவாராமற் பாங்காயிருமெனவே

கன்னியாருக்குங் கனகரத்னமாளிகைக்குள்
அக்நேரமேயலியையன்புடனே கூட்டிச்சென்று
மங்கையிடகரத்தை மன்னரலிதானபிடிக்க
துங்கமுடன்வானோர்கள் சோபனமுங்கொண்டாட
வானவர்க்குமானிடர்க்கும் வாழ்த்தி மறைந்தனரே
தானனியும் மங்கையருந் தம்பிரானைத்தான்புகழ்ந்து

அன்றலியாரு மன்புடையதேவியரும்
உண்டுமகிழ்ந்து உகந்திருந்தாரம்மானே

அலியாருந்தேவியரு மகமகிழ்ந்துமப்போது
வலியவெமன்ராஜ்ஜியத்தில் வாழுங்குடிகளுக்கும்

உற்றுபெரியோர்க்கு முண்மையுள்ளபாவலர்க்கும்
மற்றுமுள்ளராசாக்கள் வந்தபடைகளுக்கும்

பூரணமாகப் போஜனங்கள் தானளித்து
தாரணியோர்களுக்குந் தாம்பூலமுங்கொடுத்து

உகந்திருக்குங்காலையிலே உண்மையலியாரும்
அகமகிழ்ந்துதேவியுட னன்புடனேதானிருந்தார்

அதிகப்பிரியமுட னகமகிழ்ந்திருவருமாய்
பதிவாகக்கூடிப் பாங்காயிருக்கையிலே

நாடியலியாரும் நாயகியைப்பார்த்துரைப்பார்
நீடியமல்தரிக்கும் நிர்ணயமாயுன்வயிற்றில்

தரித்தவமலுந் தான்பத்துமாதஞ்சென்று
பிரித்துவிரையோனருளாற் பிள்ளைதனைப்பெற்றிடுவீர்

பிறந்தபிள்ளையாணகில் பெயர்வைக்கத்தான்கேளும்
சிறந்தமுஹம்மதுஹனிபாவா வென்பாய்சேயிழையாளுல்

பாத்திமாவென்று பரிவாகப்பேரிடென்று
ஏற்றமனைவியருக் கின்பமுடன்சொல்லிடவே

அன்றுவரசியரு மன்புடனேநல்லதென்றார்
ஒன்றாயிருவருமா யுகந்திருக்கும்வேளைதனில்

அப்போதுகங்கு லகன்றுவிடிவதற்குத்
தப்பாமற்கோழி-தானுமங்கேகூவிடுமாம்

கூவினசத்தங் குதாயலியுந்தான்கேட்டு
ஆவலுடன்தேவியைப்பார்த் தன்புடனேபயனமென்று

சொன்னவுடனே தோகையருந்தானெழுந்து
நன்னயமாய்விடைகொடுத்து நாயன்தனைப்புகழ்ந்தார்.

## அலியார் மதீனமாநகர் போகுதல்.

கதியருள்வோன்கிருபையினல் காரிகையார்விடைகொடுக்க
மதினந்தனைநோக்கி வள்ளலலிதானெழுந்து

கடந்துபுலியலியார் நாட்டமுடன்பசிரோகுத்தில்
படர்ந்தபுகழ்மதினப் பள்ளிதனில்வந்தனரே

வந்தவலியார் வல்லோன்றனைத்தொழுது
அந்தமுள்ளஅமமன ரடிபணிந்துதாமுரைப்பார்

சென்றுமணமுடித்துச் சீருடனேவந்ததெல்லாம்
அன்றுநபியார்தமக் கன்புடனே தானுரைத்தார்

அப்போதேயாலநபி யகமகிழ்ந்துதானிருக்கத்
தப்பாதலிபுலியுந் தாமிருக்குநாளையிலே

## பப்பரத்தியார் பீவியவர்கள்வயிற்றில் முஹம்மது ஹனிபா வுதித்தல்

அந்தவெமராஜ்ஜியத்தி லரசன்மகள்கெற்பமுண்டாய்
பந்தமுடனேபத்து மாதமுந்தான்சென்றபின்பு

ஆண்பிள்ளையேயொன் றன்புடனேபெற்றனரே
வான்புவியைப்படைத்த வல்லவனருட்படிக்கி

பாரமுள்ளகூராணி பண்புடன் பிள்ளையையெடுத்துச்
சீர்பெருகுஞ்சொர்க்கமதிற் சென்றமிர் தங்கொடுத்து

சுவர்க்கநதியதனில் துய்யதொருநீராட்டி
யவர்க்கமுடன்தொப்புளு மன்புடனே தான்கொய்து

சுன்னத்துமிட்டுத் துடக்கொன்றுமில்லாமல்
கண் ணுக்குமையுமிட்டுக் கஸ்தூரிதான்பூசி

வைத்துமங்கேதானிருந்தார் வாகுடன் கூராணிபோக
உற்றவரசன்மக ளுகந்துடனேபிள்ளைதனை

காணுமதிகலங்கிக் கனதிசவிப்பாக
வேணுமென்றதாதியர்கள் விரைவாகப்பார்த்திடவே

அரசன்மகளுமப்போ த^ண்டவனை தான்புகழ
விறைவாயிறையோனறிந்து விண்ணவரைத்தானழைத்து

செப்புவானப்போது சீர்பெருகும்பிள்ளைதனை
இப்போதெடுத்து வியலானராஜனமகள்

கையிற்கொடுத்துக் கடுகவேவாருமென்றான்
வையும்புகழும் வல்லஹூறாணியர்கள்

இளமைமடவர்க ளெல்லோருந்தான்கூடி
குழந்தைகொடுப்பதில்லை கோமானேயென்றுரைத்தார்

வல்லவனேநாங்களுந்தான் மதலைக்கமிர்தங்கொடுத்து
நல்லதிந்தப்பிள்ளைதனை நாங்கள்வளர்ப்போமென்றார்

அப்போதுநாய னகமகிழ்ந்துயேதுசொல்வான்
தப்பாமலேபுவியிற் றாய்வளர்க்கவேணுமென்றான்

என்றுரைத்தபோது இன்பமுள்ளகன்னியர்கள்
அன்றுமதலைக்குநபி லன்புடனே தான்கொடுக்க

வாங்கியேவானவரும் வல்லோனருளாலே
தாங்கியரசன்மகள் தன்மடியில்வைத்தனரே

வைத்தசிறுபிள்ளைதனை மங்கையரும்பாராமல்
சித்தமிகத்திகைத்துத் தியங்குகின்றநேரமதில்

அன்புடனேவானவரு மழகுள்ளமதலைதனைப்
பண்புடனேயப்போ பைங்கிளியைவிட்டகன்றார்

தடையறவேபிள்ளையது தாங்காமலேயழுக
அடையவர்கள்தான்பணியு மரசன்மகள்தன்செவியில்

கேட்டுமங்கைபிள்ளைதனைக் கிருபையுடனேயெடுத்து
தாட்டான்மையாகத் தன்மார்பிற்றனணைத்து

பாலமிர்தமூட்டிப் பாங்காய்வளர்த்திடுவார்
சாலவேதொட்டிலிட்டுத் தானேதாலாட்டுவார்
இன்னுலகிலெவரேனு மெடுத்துப் போவாரென்று
அன்னையருந்தான்பயந்து மன்புடனேமைந்தனுக்கு
பொன்னுலரனமைத்துப் புத்திரனையங்குவைத்து
மின்னாரனைவர்களை மேற்காவலாகவைத்து
இந்தப்படிவளர்த்தா ரிறையோனருளாலே
அந்தமுள்ளமங்கையரு மன்புடையமைந்தருக்கு
நீதமுடன்பெயரும் நிச்சயமாய்வைப்பதற்கு
வேதவேதியருக்கும் வேண்டும்பொருட்கொடுத்து
முன்னுலலியுரைத்த முறைமையதுதப்பாமல்
இந்நாள்முஹம்மதுஹனிபா வென்றுமேபேருமிட்டார்

## முஹம்மதுஹனிபாவை பள்ளிக்குவைத்தல்

வளர்ந்தசிறுபிள்ளையது வயதுமைத்தானபின்பு
குழந்தைதனைப்பள்ளிக்கு வைத்தாரேகோதைநல்லார்
பள்ளிக்குவைத்துப் பரிவாகவோதையிலே
பிள்ளையுமப்போ பெரியவயதாகி

ஓதுமந்தநாளையிலே வொக்கவரும்பிள்ளையெல்லாம்
ஆதியவிமகனை யப்போதுபார்த்துரைப்பார்
தந்தையறியாத தறுதலியனென்றுசொல்லச்
சிந்தைமிகக்கலங்கிச் சேதியைநாம்கேட்டோமென்று

அப்போதலிமகனு ரன்னையருகில்வந்து
தப்பாதமாதாவே தான்கேளுமொருவார்த்தை
பள்ளிதனிலோதும் பரிவானபிள்ளையெல்லாந்
தன்னிதிருநீயுந் தகப்பனில்லாப் பிள்ளையென்றார்.

அக்கோமரசன்மக ளானதொருபைங்கிளியாள்
தன்மையாம்மைந்தனுக்குத் தானுரைப்பாரம்மானே

மதினகரிருக்கும் மூஹம்மதனுற்றன்மருகர்
அதிகவரம்பெற்ற வலியாருன்றந்தையென்ருர்.

அந்தமொழிகேட்டன் புடையதாயேநான்
தந்தைதனைபார்த்துவரத் தாரும்விடையெந்தனுக்கு

தாரும்விடையென்றுரைக்கத் தாயார்மனமகிழ்ந்து
வாருஞ்சிறுபிள்ளையேநீ வல்லோனலிமகனே

இன்னஞ்சிலநாளிருந்து இசைந்தமனம்பொறுத்துத்
தன்மையாய்போவென்று தாயாருரைத்திடவே

உரைத்தமொழிகேட் டுண்மையுள்ளபிள்ளையுந்தான்
கருத்தாய்மிகவெழுந்து காதலுடன்றான்வணங்கி

விலக்கவென்னைவேண்டாம்நீ வெற்றியுள்ளமாதாவே
தலத்திலுள்ளோர்புகழும் தம்பிரானெந்தனுக்கு

உதவிமிகவுண்டு வுண்மையுள்ளமாதாவே
இதமாகப்போய்வருவே னிப்போதுஎந்தனுக்கு

தடைசொல்லாமல்நீர் தானேயென்னையனுப்ப
விடைதாருமென்றுசொல்ல வெற்றியுள்ளதாயுமப்போ

ஆதியருளுண்டென் றவர்மனதிற்றானுமெண்ணி
ஏதுவேண்டுமகனே யிப்போதுவுந்தனுக்கு

கேளுமகனேயென்று கிருபையுடன்றான்கேட்டாற்
வாளுடனேபுரவியுந்தான் வகையாகத்தாருமென்று

இந்தவிதமாய்க்கேட் டிருக்குமந்தவேளையிலே
அந்தமுள்ளநாய னருளால்ஜிபுரையீலே

செப்பமுடனழைத்துச் செப்புவான்சேதியொன்று
பப்பரத்தியம்மாள் பயன்றெடுத்தபாலகருக்கு

சுவர்க்கந்தனிற்சென்று சுத்தமுள்ளவான்புரவியும்
அவர்க்கிசைந்த வாளதுவுங்கொண்டுசென்று

வேஷமாறிப்புரவி விற்கவந்தசவுதாகிரிபோல்
தேசம்புகழலியார் தேவியார்முன்கொண்டுசென்று

விற்றுநீர்வாருமென்று மேலோன்சொல்வானவரும்
சற்றுமொழிதப்பாமற் றான்வந்தார்சுவர்க்கமதில்

இலங்குமந்தவான்பரியை யெழிலாயலங்கரித்துக்
கலக்கமதுமில்லாமற் ககனம்விட்டுதானிறங்கி

## ஜிபுரியில் சவுதாகிரிபோல் குதிரை கொண்டுவருதல்.

வந்தாரெமராஜ்ஜியத்தில் வள்ளலலிதேவியர்முன்
சிந்தைமகிழ்ந்து சிறப்புடனேவிட்டனரே
விட்டபுரவிதன்னை வேந்தனிட தன்மகனுந்
திட்டமுடன்பார்த்துச் செப்புவிலையென்றுரைத்தார்
அப்போதுவானவரு மனேகவிலைசொல்லிடவே
செப்புவிலைபோலே திரவியமுந்தான்குவித்து
வாங்கினார்வான்புரவி மைந்தனுக்குவேண்டுமென்று
பாங்காகப்புரவிதனைப் பரிவாகக்கட்டினபின்
அந்தப்புரவியுட னங்கொருவாள்தனையுஞ்
சிந்தைமகிழ்ந்துகொடுத்து ஜிபுரையீலும்போய்மறைந்தார்
மறைந்தவுடனே மூஹம்மது ஹனீபாவும்
சிறந்தகுதிரையையுந் திடவாளுங்கைப்பிடித்துச்
செப்பமுடன்றாயாரின் சீர்பாதமேபணிந்து
இப்போதுநான்போக வெனக்குவிடைதாருமென
போய்வாருமென்றுசொல்ல புகழ்பொருந்துந்தாயாருந்
தூயமகன்றனக்குச் சொல்லுவாரோர்சேதி
மதினநகர்தனக்கு மகனேநீர்போய்ச்சேர்ந்தால்
கதிரிலகுமப்துல்லா கனமானதன்குளத்தில்
தலையுமுழுகாமற் றானுமந்தவெள்ளாமை
நிலையாக்கோதும்மை நிற்கும்பயிர்தனையும்
குதிரையும்மேயாமல் கொள்கையுடன்றானிருப்பாய்
அதிகவேகமாகநடந் தந்நகரந்தான்சேர்ந்து
திங்கள்தனையழைத்துச் செல்வநபிதாள்பணிந்து
சங்கையுடனுன்பாவா தங்களையுங்கண்டிருந்து
வந்துசேரென்று மாதாமகிழ்ந்துரைக்க
அந்தநல்லவேளையிலே யல்லாவுதவியினால்

### முஹம்மது ஹனீபா மதினநகர் போய்ச்சேர்தல்.

நடந்துமதினம்போய் நாட்டமுடனேதுசெய்தார்
அடர்ந்தப்துல்லாகுளத்தி லதிலிறங்கிநீர்கலக்கி
நீராடிநிற்கையிலே நீதியுள்ளகோதும்மையில்
சவாரிவந்தநற்குதிரை தானோடிமேய்ந்திடவே
அப்போதலியாரு மன்புடனேதலைமுழுக
செப்பமுனமக்களுடன் சிறப்புடனேநீராட

கூட்டிவருகையிலே கோலமுள்ள வூறனியில்
காட்டமுடன் மக்களுடன் கற்குளத்தைப்பார்க்கையிலே
எமன்பதியிருந்துவந்து வெழில்முஹம்மதனிபாவும்
அமைந்தகுளத்தை யவர்கலக்கி நின்றதுவும்
தாரணியிற்கோதும்மையைத் தான்குதிரைமேய்ந்ததுவும்
வூறனிசீரையெல்லா மொக்கக்குழப்பினதும்
கண்டுமலியார் கருத்தினிற்கோபமாய்
இன்றுசிறுபயலே இப்படியுஞ்செய்வாயோ
என்று அலியாரு மிருவிழியுந்தான்சிவந்து
துண்டுபட வெட்டத் துணிந்துகைவாளெடுத்து
வெட்டுவாரப்போது வேந்தரலியாரும்
பட்டதொருவாளும் பந்துகுதித்தாப்போலெழும்ப
பின்னுமவர்வெட்டப் பெருக்கமதாய் முன்போல
வன்னமுள்ளவாளாலே மறுபடியும்வெட்டிடுவார்
வெட்டுகின்றபோததனை வேங்கைபுலிமகன்வானால்
தட்டியலியார்கரத்தைத் தன்கையினாற்பிடித்து
இருகாமுமொன்றாக விடதுகையினாற்பிடித்துப்
பெருக்கக்குதிரை தன்னைப் பின்னொருகையினாற்பிடித்து
மன்னனுதவியினால் முஹம்மதனிபாசொல்வார்
நன்னேர்மையுள்ள நபியிடத்தில்வாருமென்றார்
அப்போதலியாரு மன்புடனேதானடந்தார்
செப்பமுடனலியாருஞ் சேர்ந்துவருகையிலே
ஆதிமுஹம்மதரு மவர்கள்வருவதைபார்த்து
நீதிமிறையவனை இப்புதுமைசெய்தான்காண்
என்றுமனதிலெண்ணி யிருக்குமந்தநேரமதில்
சென்றுநபியருகே சேர்ந்துவழக்குரைக்க
செகமகிழுநன்னபியுஞ் சிந்தைதனில்மகிழ்ந்து
முஹம்மதனிபாவை முஹம்மதர் தூக்கியேமடியில்
வைத்திருக்கவப்போது வல்லோனலியுரைப்பார்
உத்தவழக்குரைக்க வந்தேனுனுங்களுடன்
அந்தவழக்கை யன்புடனேகேளாமல்
வந்துசிறுவனைநீர் மடியில்வைத்தகாரணமேன்
என்றலியார்கேட்க யிறசூல்நபிமகிழ்ந்து
அலியார்தன்னைப்பார்த் தன்புடனேயேதுரைப்பார்
இப்போதுநீரேகியின்பமுட னக்குளத்தில்
செப்பமுடன்றலைமுழுகித் திரமுடனென்னருகில் வந்தால்
பின்னேவுரைப்பேனென்று பெரியோனபியுரைத்தார்
அந்நேரவேளையிலே யலியார்க்குளஞ்சேர்ந்தார்
அந்நேரமோதினு மன்புடனேவாங்குசொல்வார்

சிந்தைமகிழ்ந்து நினபியும்யார்களுடன்
துய்யோனஸர்தொழுகத் துணிந்ததுமங்கேதானே
பையகடந்துவந்தார் பாங்காகியகிணற்றில்
கூவல்திறக்காதிருக்கக் குறித்துமங்கேவந்தவர்கள்
ஆவலுடன்பார்த்து மங்கேதானின்றிடவே
அப்போநபியிறசூலனைவரையும் பார்த்துரைப்பார்
தப்பாதலிபுலியார் தான்வரவுமில்லையென
மூஹம்மதனிபா முக்கியமாயேதுசொல்வார்
ஜெகம்புகழுநன்னபியே சிறப்புடனேகூவல்தனை
திறப்பேனுனென்றுசொல்லத் துய்யநபியேதுசொல்வார்
வரமருளுநாயன் வல்லபுலியல்லாமல்
மற்றொருவர்தான் திறக்க வல்லமைதானில்லையென
உற்றபுகழுடைய வுண்மைநபிநீர்கேளும்
இந்நேறமேதிறப்பே னென்றிறத்தைப்பாருமென
நன்னபிநல்லதென்று நாட்டமுடன்பார்த்து நிற்க
குன்றுமலைபோலே குறித்ததொருகல்லதனைச்
சின்னவிரலாற்றூக்கிச் சிறுவருமேபோட்டிடுவார்
போட்டபொழுதே புகழ்பெரியநன்னபியும்
நாட்டமுடனிப்புதுமை நாயனுதவியென்று
நபியுடனேயார்களுந்தான் நாடியொளுச்செய்திடுவார்
தபம்பெறும்ஸஹாபாக்கள் தானொளுவுஞ்செய்திடுவார்
அப்போதுயாவர்களு மஸறுதொழுதனரே
செப்பமுடனிறையைத் தொழுதிருக்கும்வேளையிலே
தலைமுழுகப்போயலியுந் தண்ணீர்தனைப்பார்த்தார்
கலங்கியிருந்ததினாற் கலங்கல்தெளியுமட்டும்
இருந்தார்தெளிந்ததின்பின்னினிதாய்தலைமுழுகி
பொருந்துமனத்தோடு போந்தார்நபியிடத்தில்
அந்நேரவேளை யந்தகிணற்றினிலே
சின்னயமாய்நீரெடுக்க நீதியலிதான்பார்த்து
இந்தகிணற்றுமூடுங்கல்லை எவர்கள்திறந்தாரென்று
வந்தலியார்கேட்க வள்ளல்நபிதானுரைப்பார்
செப்பமுடனலியே சிந்தையுடநீர்கேளீர்
தப்பிலாச்சொல்லுகிறேன் தானடந்தவாறதனை
முன்னுளிறையோன் மொழிந்தவுரைப்படியே
அன்னமெமராஜ்ஜியத்தி லங்கேநீர்போனதுண்டோ
குதிரையும்வாள்தனையுங் குறித்துநீர்போனதுண்டோ
அதிரநடந்தலியே யன்புடனேபெண்கேட்டு
நடந்துதெருவீதியெல்லா நாட்டமுடன்போனதுண்டோ
படர்ந்தபுகழ்ராஜன்மகள் பாரியென்றுசொன்னதுண்டோ

அக்கேரம்வானவர்க ளன்புடனே வந்ததுண்டோ
மன்னனுதவியினுல் மணமுகீர்முடித்ததுண்டோ
அந்தவரசியர்க்கு மருள்வார்த்தைசொன்னதுண்டோ
மைந்தன்பிறந்தால் மூஹம்மதுஹனிபாவாவென்று
வெற்றியுள்ளபெயர்வைக்க விருப்பமாய்சொன்னதுண்டோ
புத்திசொல்லிவக்திரேயந்தப் புதுமையுள்ளபிள்ளையிது
இக்கேரமேதுஆச்செய்ய விக்கிணமைதிறக்குதென்று
வந்துகீர்திறவாததால் மூஹம்மதுஹனிபாதிறந்தார்
என்றுநபியுரைக்க வேகன்புலியலியார்
அன்றுமனம்சலித்து மன்பாகப்பள்ளிதனில்
புகுந்துகதவடைத்துப் புலம்பியங்கேதாமிருந்தார்
மிகவுநபியிறசூல் விளம்புவாரப்போது
மன்னனுதவியினுல் மூஹம்மதுஹனீபாவேகீர்
இந்தகேரமுன்தந்தையரை யேகிகீரழையுமென்ருர்
என்றுநபியுரைக்க விறையோனருளாலே
அன்றுமந்தக்குழைந்தை யன்புடனேபள்ளியிலே
போய்நின்றுதந்தையரைப்பிரியமுடனேயழைக்க
சேயழைத்தசப்தந் தீரவலிதான்கேட்டு
புங்கமுடன்வெளியில்வந்து பிள்ளைதனை எடுத்தணைத்துத்
திங்கள் தனையழைத்த செல்வநபியருகில்வந்தார்
அக்கேரவேளைதனி லாலநபிதாமுரைப்பார்
கன்னல்மொழியார்மகனைக் காதலுடன்கூட்டிக்கொண்டு
வீட்டுக்குப்போமென்று வேதாம்பர்தா முரைத்தார்
தாட்டிகமாய்பிள்ளையைத் தான்றூக்கியேயப்போது
மூந்தினபிள்ளையஸனுஸைனை முன்னேநடத்திக்கொண்டு
வந்தாரலிமனையில் மனமுமகிழ்வாக
ஆலநபிமகளா ரன்புடையபீவியரும்
பாலர்நடந்துவரப் பாங்காகத்தான்பார்த்து
வரிசையஸனுஸைனர் மண்ணில்நடந்துவரப்
பிரியமுடனர்பிள்ளையைப்பின்னெடுத்துவந்ததென்ன
உற்றதொருபிள்ளைகளு முகந்துநடந்துவரப்
புத்திதடுமாறிப்போனீரோவாழரசே
என்றுரைத்தபோதே யேகன்புலியுரைப்பார
நன்றியிறசூல்மகளே நல்லதொருபீவியேகேள்
வல்லோன்வரவிடுத்த வான்புரவிதானுமது
நல்லயெமராஜ்ஜியத்தில் காட்டமுடன்கள்ளர்கொண்டு
போனபுரவியதைப் போய்த்திருப்பிவந்தவிதந்
தானுமறியீரோ தயவுடையபீவியரே
அந்தவரசன்மகளை யன்பாய்மணமுடித்து
வந்ததறியீரோ வல்லோனபிமகளே

அப்போதரசன்மக ளன்புடனே சூலாகித்
தப்பாமற்பெற்றெடுத்த தன்குழந்தைதானல்லவோ
அகமகிழவெந்தனுக்கு மரியபெரியோன்கொடுத்த
முஹம்மதனிபாவென யிறசூல்நபிமகளாற்
நன்றுமொழிகேட்டு நல்லதெனவேதெளிந்து
அன்றுமனமகிழ்ந்து மன்புடனேபீவியரும்
நலமோடலியாரிடத்தில் நன்மகனைத்தான்வாங்கிப்
பலமுடனே தான்வாழ்த்திப் பரிவாகவங்கோரஞ்
சிந்தைகளிகூர்ந்து சீராயொருமனதாய்
வந்ததிருமகனை வாரிமடியில்வைத்தார்
வள்ளலலியாரு மன்னரிறசூல்மகளும்
உள்ளங்குளிர்ந்து முவப்பாகத்தானிருந்தார்
அப்போகுழந்தையது ஆண்டவனுதவியினால்
தப்பாவயதுபத்துந் தானறியாப்பாலகனும்
ஏகனுதவியினா லிருமூன்றுமாதமுமாய்
வாகாகவந்திருக்க வள்ளலலிபீவியரும்
பழுதில்லாமல்வளர்த்துப் பாங்காகயிருக்கையிலே
வளுவில்லாமதினநகர் வாழுமலியார்தமக்கு
அரியபெரியோ னருளுதவிதன்னாலே
சிறப்புமிகுந்திடுமாஞ் செல்வமது மோங்கிடுமாம்
இந்தப்படியாயிருக்க விறையோனருளால்
அந்தயெமராஜ்ஜியத்தி லரசினிட தன்மகளும்
அப்போதுபிள்ளைதனை யன்புடனே மனதிலெண்ணிச்
செப்பமுடனோர்வருடஞ் சென்றதினால்மனதுநொந்து
வாடிமெலிந்து மதினநகர் தான்போக
கூடும்படையுடனே கோதையருந்தான்போந்தார்
வந்தாராசன்மகள் மதினநகர்மாளிகைக்குள்
முந்திநபிதாள்பணிந்தார் முன்னோனுதவியினால்
மன்னனருளாலே வான்புரவிதானேறும்
அங்கேரமலிபாத மன்புடனே தான்பணிந்து
நபிமகளாய்ப்பீவியிட நற்பதமுந்தான்பணிந்து
சுபமிகுந்தபாத்திமுத்துஞ் சொல்வார்மிகவாழ்த்தி
ஏகனுதவியினா லிருவர்களுமொருமனதாய்
வாகாகமனையில் வள்ளலலிமக்களுமாய்
இருந்தாரகமகிழ்ந்து யேகனுதவியினால்
பொருந்தியிருக்கப்போர் வேந்தன்றன்மகளும்
சேர்ந்தலியாருடனே சேயிரண்டுமீன்றனரே
சார்ந்தகுழந்தையைத் தானே நபிமகளும்
ஆண்டவனுதவியினா லமீறெனவேபெயருமிட்டார்
வேண்டியமங்கையரும் விருப்பமுடனே நல்ல

பின்னு மொருமகனைப்பெற்றதினற்பிரியமுடன்
கன்னல்மொழிமானுர்கள் காசிமென்றுய்பேர்கொடுத்தார்
மைந்தர்வளர்ந்திடவே மன்னரசன்மகளுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயிருந்தனரே
இருந்தவரசன்மக ளேழுவருடமிருந்து
திருந்தமவுத்தானர் சேர்ந்தார்கள் சுவர்க்கபதி
மவுத்தாயவர்போக மன்னனுதவியினல்
சவுத்தாயடக்கித் தானிருந்தார்யாவர்களும்
அடக்கிமுடிந்தவுடன் யாவர்களுங்கூடிப்
படைத்தோனருளாலே பாத்தியாவோ தினரே
ஆலகபியார்களும் ஸஹாபாக்களுமிருந்து
சீலமுடனலியார்தஞ் சீராணபிள்ளைகளும்
கூடியுமப்போ குணமாயிருக்கையிலே
வாடியிருக்கு முஹம்மதுஹனீபாவை
ஆலகபிதாமு மருகிலழைத்துவைத்துச்
சீலமுடனே சிறந்திருக்கும்வேளையிலே
அன்றுயெமராஜ்ஜியத்தி லரசருமில்லாததினல்
பண்டுள்ளமந்திரிமார் பலவிதமாயோசித்து
மதினநகர்தனக்கு வாகானகத்தெழுதி
தருமான தூதர்களைத் தான்போகவனுப்பினரே
கத்ததனைவாங்கிக் கருத்துடனேபாதைசென்று
வித்தகனர்வாழு மிகுமதினஞ் சென்றனரே
சென்றவுடன்கத்ததனைச் சீக்கிரமாய்த்தானெடுத்து
அன்றுகபியாற்கொடுத் ததபுடனே நின்றனரே
கத்ததனைவாங்கிக் காரணமுஹம்மதருஞ்
சித்தமகிழ்ந்து சிறப்புடனேயந்நேரம்
அலியார்தனையழைத்து மாலகபிதாமுரைப்பார்
வலியவரசன்மகள் வைத்திருந்தமந்திரிமார்
நன்னேர்மையாயெழுது காட்டமுள்ளகத்திதென்றும்
அந்நேரமலிகையி லன்புடனே தான்கொடுக்க
வாசித்துப்பார்த்தார்காண் வல்லோனருளாலே
பூசித்தயெமராஜ்ஜியத்திற் புகழ்சார்ந்தசீமையெல்லாம்
பட்டத்தரசு பதிவாகவில்லாமல்
திட்டமுடன்ராஜ்ஜியமுஞ் சிறப்பாயிருக்கவில்லை
என்மெழுதுங்கத்ததனை யின்பமுடன் பார்த்தவுடன்
அன்றலியாருடனே யாலகபிதானுரைப்பார்
ஜெகமுழுதுமாளுதற்குச் சிறும்புலியேகேளும்
முஹம்மதுஹனிபாவை முடிசூட்டிவைப்பதற்கு
அனுப்பவேண்டுமென்றே யாலகபிதாமுமப்போ
கனிந்துமிகச்சொன்னவுடன் கனமாகவந்நேரம்

நல்லதென்றுசம்மதித்தார் நாயன்புலியலியார்
வல்லபுகழிறசூல் மனமகிழ்ந்து தூதர்களை
அழைத்துமிகவுறுதி யவர்கையிற்கதத்தெழுதி
தழைத்தயெமராஜ்ஜியத்திற் றன்சேர்ந்தசீமையெல்லாம்
வாழரசர் முஹம்மது ஹனிபா முடிதரிக்கத்
தாழ்வுடன்வந்து தான்சேரவென்றெழுதி
ஈய்ந்தார்கள் கத்ததனை யெடுத்துமே தூதர்களும்
வாய்ந்தயெமன்பதியில் வந்துமந்திரிகையீந்தார்
கத்ததனைவாங்கி கண்மேலேதானொற்றி
சிததமகிழ்ந்துடைத்துச் சிறப்பாகவாசித்துப்
பார்த்துமனமகிழ்ந்து பாருலகராசருக்குக்
கீர்த்தியுடன் மறுகத்துக் கிருபையுடன்றனெழுதி
தூதர்கையிற்கொடுத்துச் சீக்கிரமாய்செல்லுமென்றார்
காதலுடன்கத்ததனை கருத்தாகத்தானெடுத்துப்
பாருலகின்ராசருக்குப் பரங்காகயீந்திடவே
சீருடனேபார்த்தரசர் சேர்ந்தபடைதான்கூட்டி
வந்தார்கள்யெமன்பதியில் வல்லோனருளாலே
சிந்தைகளிகூர்ந்தரசர் சேர்ந்திருக்கும்வேளையிலே
மதினநகரமதில் முஹம்மதிறசூலுடனே
கதியிலகுமலிபாரும் கனமானயாருகளும்
முஹம்மதனிபாவு முக்கியஸஹாபாக்களுடன்
ஜெகமகிழுகின்ற சேனைபரியானையுடன்
மேளதாளங்களுடன் மிகவாடம்பரத்துடனே
ஆளுமிறையோனருளால் யவர்களுந்தானெழுந்து
நடந்துயெமன்ராஜ்ஜியத்தில் நாட்டமுடன்போய்ச்சேர்ந்தார்
அடர்ந்துவந்தராஜர்களு மந்நகரமந்திரிகளும்
வந்துநபியிறஸூல் மலர்பாதம்போற்றிசெய்தார்
அந்தநல்லவேளையிலே யாலநபிதாமுரைப்பார்
முஹம்மதனிபாவிற்கு முடிசூட்டவேணுமென்று
அகமகிழுமந்தரிகட்கு மரசருக்குத்தானுரைத்தார்
அப்போதுமந்திரிகளு மரசர்களுந்தாமுரைப்பார்
இப்போதுமெங்களுக்கு மிதுவேசரியென்றுரைத்தார்
சரியென்றுரைத்திடவே தானவன்நபியிறசூல்
பரிவானபதிதனிலே பந்தல்களுந்தோரணமும்
சிங்காரமாகச் சிறப்பாயலங்கரித்து
மங்காதசந்திரன்போல் மண்டபமுந்தானியற்றி
மண்டபத்தினுள்ளே மணியார்சிம்மாதனமுந்
கண்டவிடமெல்லாம் கனகரத்தினம்பதித்து
முஹம்மதனிபாவை மகனையாய்ச்சிம்மாதனத்தில்
புகையொருவரில்லாமற் பண்புடனே தானிருக்க

பட்டமதுகட்டப் படைத்தோனருளாலே
திட்டமுடனிராஜாக்கள் சேரவேசூழ்ந்துநிற்க
ஆலநபியிறசூ லருகாகவேயிருக்கச்
சீலமுடனேயார்கள் சேரவேவீற்றிருக்க
மற்றுமுள்ளஸஹாபாக்கள் மனமகிழ்ந்துதானிருக்க
குற்றமில்லாசோபனமுங் கூறமிகவிருக்க
பாசத்துடனரசர் பலர்களுஞ்சூழ்ந்துநிற்க்
மாசில்லாமணிபோல முஹம்மதுஹனிபாவிற்கு
அட்டதிக்கும்போற்று முஹம்மதிறசூல்நபியார்
பட்டமதுகட்டினார் படைத்தோனருளாலே
ஆமினல்லாவென் றன்பாய்த்துஆவோதியபின்
சீலம்தனிலுள்ளரசர் சேரவேபணிந்துநின்று
கப்பமுங்கட்டிக் கனமாயிருங்களென்றார்
அப்போதரசர்களு மருட்படியேயாகுமென்றார்
முஹம்மதுஹனீபாவையு முதன்மையுள்ளமந்திரியும்
அகமகிழத்தானழைத்து மாலநபியேதுசொல்வார்
அட்டதிசைமுழுது மடர்ந்திருக்குங்காபர்களைத்
திட்டமுடன்கலிமாச்சொல்லி தீனைவிளக்குங்களென்றும்
ஆலம்படைத்த வாண்டவனருளாலே
சீலமுடனுண்டு சிறப்பாயிருங்களென்று
வாழ்த்திநபியிறசூல் வண்மையுள்ளயார்களுடன்
சூழ்ந்தஸஹாபாக்களுஞ் சுற்றும்படைகளுடன்
மன்னர் நபியெழுந்தார் மதினநகர்போக
முன்னேனுதவியியினால் முஹம்மதுஹனீபாவெழுந்து
அன்றுநபியிறசூ லடிமலரைத்தான்பணிந்து
பண்பாயபூபக்கர் பாதமிகவணங்கி
ஆதியுமறுகத்தா வடிமலரைத்தான்பணிந்து
ஓதுமுதுமானார்பாத முண்மையுடனேபணிந்து
தன்னுடையபாவா தக்கவலியார்பாதத்தை
நன்னயமாகப்பணிந்து நலமாகநின்றிடவே
அலியார்மனமகிழ்ந் தன்புடனே தான்வாழ்த்தி
வலியாய்ப்புவியாண்டு மகிழ்வாயிருமகனேயென்றார்
இந்தவிதமான வெழிலாந்துஆவுடனே
சொந்தமதாய் விடைகொடுத்துத் துரிதமாயெழுந்தனரே
மதினாநகர்நோக்கி வள்ளல்நபியாவர்களுந்
கதியாய்நடந்து கனமதினஞ்சேர்ந்தார்கள்
சேர்ந்தாரனைவர்களுந் திருமாளிகையிற்போய்
சார்ந்தார்நபியிறசூல் தானவனருளாலே
ஆலமெங்குமோர்குடையி லன்புடனே தானாண்டு
சீலமுடன் தீன்விளங்கச் செய்திருந்தார்மதினமதில்

இத்தப்படியிருக்க வெமன்பதியையாளுகின்ற
மைத்தன்முஹம்மது ஹனிபாமனமகிழ
மன்னர்களெல்லோரும் வந்துமங்கேதான்பணிந்து
கின்னயமாய்க்கப்பம் நிலையாகக்கட்டிவர
ஆராய்ந்துவேக மருகேமுழக்கிடுவார்
வாரணங்கள்சேனை வகைவகையாய்ச் சூழ்ந்திடவே
முன்னரசரெல்லோரும் முறையுடனேவீற்றிருந்தார்
மன்னர்துரைமார்கள் மனமகிழ்ந்துசூழ்ந்திருப்பார்
சேனையுடன்மந்திரிமார் சேரவருகிருக்க
மானையொத்தவிழிமடவார் மங்களமும்பாடிநிற்க
காட்டியமாதர் நலமுடனேயாடிநிற்க
பாட்டுகள்பாடிப் பலகவிஞர்சூழ்ந்துநிற்க
ஆலாத்திக்கொண்டு மனேகம்பெண்களேந்திநிற்க
கோலரத்னவாலாத்திக் கோதையர்களேந்திநிற்க
ஜெகமுழுதும்வாழ்த்த சிங்காதனம்வீற்றிருந்து
மகுடமுடிதரித்து முஹம்மதுஹனிபாவும்
திட்டமுடன்கலிமாத் தீனெறியுந்தானோங்கச்
சட்டஞ்செலுத்தித் தானுலகமாண்டிருந்தார்
வானம்படைத்த வல்லவன்றன்னருளாலும்
தீனெறிபயிற்றுஞ் செல்வநபிபொருட்டாலும்
மங்களமதாக வாழ்ந்திருந்தாரம்மானே
திங்கள்தனையழைத்த செல்வநபிமிகவாழி
யார்கள்மிகவாழி ஸஹாபாக்கள் தான்வழி
பாரில்மாதர்போற்றும் பாத்திமாயவர்கள்வாழி
அலியார்பயின்றெடுத்த வஸனுஸைனர் தான்வாழி
மலிவான அன்பியாக்க ளவுலியாக்களும்வாழி
மூச்கியவெமன்பதிவாழ முஹம்மதுஹனிபாவாவாழி
தக்கபுவியிற் றூனுள்ளோர்தான்வாழி
பப்பாத்தியம்மாளும் பண்புடனேமிகவாழி
செப்பமுடனிக்கதைசெய் செய்துமீராதான்வாழி
பாடல்பதிப்பித்த ஷாஹுல் ஹமீத்வாழி
ஆமீனல்லாஹு ஆமீன்யாறப்பலாலமீன்

பப்பாத்தியாரம்மானை முற்றிற்று.

---

Printed at Shahul Hameedia Press, Madras 14-2-1952

7B
6-48

## முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

இதாகிறது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானி வல்கவுதுஸ் ஸமதானீ ஸைபிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிரீல் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கருமத்துகளில் நின்றும், அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை தமிழில் மொழி பெயர்த்து "முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்" என்னும் நாமமிட்டு அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரு. 3-0-0

## மஜ்மூஅ முனாஜாத்.

சுத்த தமிழ்.

(முதல் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத், யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலைபாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, மூத்துமணி மாலை, பக்தி ஆனந்த யாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தேனவாஸ் முனாஜாத், சரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்து பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.